விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 08 சனிக்கிழமை (24.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 005



ரா ம் கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


# உரிய தீர்வை முன்வைத்தால்

# பிரச்சினைகளை தீர்க்க முடியும்

## விஜய ஜயதிலக சுட்டிக்காட்டு

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு முக்கிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தத் தவறியுள்ளது என ட்ரான்பரன்சி இன்டர்நசனல் அமைப்பின் தலைவர் விஜய ஜயதிலக தெரிவித்துள்ளார்

சமூகத்தில் பதற்ற நிலைமை ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதற்கான தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## கிளர்ச்சிக் குழு ஐ.சி.ஆர்.சியில் முறையீடு

(கொழும்பு)


ஜே.வி.பி. கிளர்ச்சிக் குழு உறுப்பினர்கள் காணாமல்போன சம்பவம் தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜே.வி.பி கிளர்ச்சிக் குழுவில் அங்கம் வகிக்கும் லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல்போனதாக தெரிவிக்கப்படுகிறது.

காணாமல் (16ஆம் பக்கம் பார்க்க)

### மன்மோகன் சிங் தமிழகத்திற்கு விஜயம்

## முகாம்களைவிட்டு வெளியேற ஈழ அகதிகளுக்கு தடைவிதிப்பு



(சென்னை)

இந்தியப் பிரதமரின் இரண்டு நாள் தமிழக சுற்றுப் பயணத்தால் இலங்கை அகதிகள் முகாம்களின் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதையொட்டி இன்று முதல் 3 நாட்களுக்கு வெளியூர் செல்ல இலங்கை அகதிகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மன்மோகன் சிங் நாளை தமிழ் நாட்டுக்குச் வரவுள்ளார். எதிர்வரும் 26-ம் திகதி காரைக்குடியில் அண்ணாமலை பல்கலைக்கழக விழாவில் கலந்து கொள்கிறார்.

பிரதமரின் இரண்டு நாள் சுற்றுப் பயணத்தால் (15ஆம் பக்கம் பார்க்க)

## நீர்வேலி இரட்டைக்கொலை வழக்கு சந்தேக நபர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நீர்வேலிப் பகுதியில் கணவன், மனைவி ஆகிய இருவரையும் வெட்டிப் படுகொலை செய்த சந்தேக நபரை நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த டிசம்பர் மாதம் 7-ம் திகதி யாழ். நீர்வேலிப் பகுதியில் காணிப் பிரச்சினை காரணமாக கணவன், மனைவி ஆகிய இருவரும் அவர்களின் உறவினரெனத் தெரிவிக்கப்படும் ஒருவரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

யாழ்.நீர்வேலியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் பெற்றோரான மார்க்கண்டு உதயகுமார் (வயது55), அவரது மனைவி வசந்தமலர் (வயது 45) ஆகியோரே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

நீண்ட நாட்களாக தேடப்பட்டு வந்த இரட்டைக் கொலை வழக்கின் சந்தேக நபர் இரகசியப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டுள்ளார்.

44 வயதுடைய அருணாச்சலம் குணேஸ்வரநாதன் என்பவரே கோப்பாய் பொலிஸாரினால் (15ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி வெளியானது

(கொழும்பு)

5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் மூலம் பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக வெட்டுப் புள்ளிகளை கல்வி அமைச்சு நேற்று வெள்ளிக்கிழமை வெளிட்டுள்ளது. தமிழ்மொழி மூல பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளி விபரம் பின்வருமாறு:-

றோயல் கல்லூரி-கொழும்பு-185, டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி- கொழும்பு-175, இந்துக் கல்லூரி-யாழ்ப்பாணம்-158, ஸாஹிரா கல்லூரி-கல்முனை- 155, சென். மிக்கேல் கல்லூரி (16ஆம் பக்கம் பார்க்க)

# போர்க் குற்றம் செய்தவர்களை நீதியின் முன் நிறுத்துவோம்!

## பிரி. பாராளுமன்ற குழு அறிவிப்பு

(லண்டன்)

ஈழ விடுதலைப் போராட்டத்தில் உயிரிழந்தவர்களுக்கும் இன்றுவரை இலங்கையில் வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கும் நீதியைப் பெற்றுத்தரும் முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம் என தமிழ் மக்களுக்கான பிரித்தானியாவின் அனைத்துக் கட்சிப் பாராளுமன்றக் குழுவின் தலைவர் லீ ஸ்கொட் தெரிவித்துள்ளார்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மூன்றாவது பாராளுமன்ற அமர்விற்கு அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தியிலேயே லீ ஸ்கொட் இதனைத் தெரிவித்துள்ளார்.

போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களைச் சர்வதேச விசாரணை அமைப்பின் முன்னிலையில் நிறுத்துவதற்கான முயற்சியில் எனது சகாக்களையும் அழைத்துள்ளேன். இதேவேளை பிரித்தானியாவின் மிச்சம், மோடன் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் ஷிபொன் மக்டோனா அவர்கள் அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தியில் எதிர்வரும் ஐ.நாவின் மனிதவுரிமைகள் கூட்டத் தொடரில் துறைசார் தகைமையுடன் பரப்புரைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் கூடவுள்ள ஐ.நாவின் மனிதவுரிமைகள் கூட்டத்தொடரில் அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ள ஷிபொன் மக்டோனா போர்க் குற்ற விசாரணை தொடர்பில் கிடைக்கப்பெறும் இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்த . (15ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. உயர்தர பெறுபேறு வெளியிடுவதில் மேலும் தாமதம்

### பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு மேலும் சில தினங்கள் தேவைப்படுகின்றன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான இசட் வெட்டுப்புள்ளிகள் இன்னமும் அறிவிக்கப்படாமை காரணமாகவே உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட முடியாமல் இருப்பதாக ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

. கடந்த நவம்பர் மாத இறுதியில் மேற்படி உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாவதற்கு ஏற்பாடாகி இருந்த நிலையில் கால தாமதமாகி வருகின்றது.

இந்நிலையில் பழைய மற்றும் புதிய கொள்கைத் (15ஆம் பக்கம் பார்க்க)

## வட மாகாண கல்வி அமைச்சின் செயலராக சத்தியசீலன் நியமனம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன் நியமனம் பெறுகிறார்.

எதிர்வரும் முதலாம் திகதி அமுலுக்கு வரும் வகையில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறி நியமனக்கடிதம் வழங்கிவைப்பார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய இ.இளங்கோவன் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக கடந்த ஆகஸ்ட் (15ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூர் கல்வி கோட்ட அதிபர்களுக்கான அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான 2012-ம் ஆண்டிற்கான கல்வித் திட்டமிடல் கூட்டம் இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணம் சென்.பெனடிக்ற் வித்தியாலயத்தில் இடம்பெறும் என நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா அறிவித்துள்ளார். (பா-6)

# புராண இசை நாடக இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

குந்தியின் செல்வன் புராண இசை நாடக இறுவெட்டுவெளியீடும், கலைஞர் கௌரவிப்பும் நாளை மாலை 3.00மணிக்கு தொல்புரம் சர்வோதய மண்டபத்தில் தீவகம் வலயக்கல்வித் திணைக்களம் ஆசிரிய ஆலோசகர் மு.கேசவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் யாழ்.கல்வியியற்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன், சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச சபைத்தலைவர் திருமதி நா.ஐங்கரன், யாழ் கல்வியியற் கல்லூரி நாடகமும் அரங்கியலும் விரிவுரையாளர் க.இ.கமலநாதன், கௌரவ விருந்தினராக கொழும்பு இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி கிருபாணாந்தமூர்த்தி ஜெகதாம்பிகை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-11)

# 14 பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி சபையினால் உதவிப்பணிப்பாளர்(நிதி) மற்றும் உதவிப்பணிப்பாளர் (கொள்வனவு வழங்கல் செலுத்துதல்),

உதவிப்பணிப்பாளர் (பொறியியல்), உதவிப்பணிப்பாளர் (கட்டிடக்கலை), நிர்வாக உத்தியோகஸ்தர், தொழில்நுட்ப உத்தியோகஸ்தர், திட்டமிடல் உதவியாளர்,

திட்டமிடல் உதவியாளர் (திட்டமிடல் மற்றும் தகவல் முகாமைத்துவ முறைமை), திட்டமிடல் உதவியாளர் (ஆராய்ச்சி), திட்டமிடல் உதவியாளர் (புள்ளிவிபரம்), திட்டமிடல் உதவியாளர் (முறைமைப் பகுப்பாய்வாளர்),

தரவுத்தயாரிப்பு உதவியாளர், சமுதாய அபிவிருத்தி உதவியாளர், செய்தி நிரல் எழுதுநர், முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத)

ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவற்றில் முதல் 12 பதவிகளுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் பட்டம் பெற்றவர்கள் பொருத்தமான பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். மற்றைய இரண்டு பதவிகளுக்கு விண்ணப்பிப்போர்,

க.பொ.த(சா/த) பரீட்சையில் தமிழ் மொழி, கணிதம், ஆங்கிலம், உட்பட்ட 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தலுடன் செய்தி நிரல் எழுதல் பதவிக்கானவர்கள் க.பொ.த (உ/த) இல் விஞ்ஞானம் அல்லது கணித பாடத்துறையில் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்து மூன்றாம் நிலை கல்வியைப்பயில அவசியமான அடைவு மட்டத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

முகாமைத்துவ உதவியாளருக் கான பதவிக்கானவர் க.பொ.த(உ/த) இல் பிரதானமான 3 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது

விண்ணப்பங்களை பணிப்பார் நாயகம், நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை, 3 ஆவது மாடி செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக பிறப்புச்சான்றிதழ், நன்நடத்தை பத்திரங்கள்-2 கல்விச்சான்றிதழ், சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ் (இருப்பின் மாத்திரம்), தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்பிரதிகளை இணைத்து கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக தகவல்களை நேற்றைய வர்த்தமானி பத்திரிகையிலோ, வலம்புரிக் காரியத் திலோ பார்வையிடமுடியும். (எ-1)

# யாழ்.கல்வியியற் கல்லூரிக்கு ஆறு விருதுகள்!

(யாழ்ப்பாணம்)

2011ஆம் ஆண்டு அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி நாடக ஆற்றுகையில் பங்குபற்றிய யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஆறு விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அம்மையே அப்பா எனும் சமூக விழிப்புணர்வு நாடகமே இவ்விருதுகளைப் பெற்றுக் கொண்டது.

இந்நாடகத்தின் சிறந்த நாடக அளிக்கை முறைமைக்கான விருது நாடகத்துறை விரிவுரையாளர் க.இ.கமலநாதனுக்கும் சிறந்த இசையமைப்பிற்கான விருது சங்கீதத்துறை விரிவுரையாளர் திருமதி வி.நரேந்திராவிற்கும் சிறந்த நடிகருக்கான விருது முகிழ்நிலை ஆசிரியர்களான அ.நிரோஷனுக்கும் சிறந்த துணைநடிகைக்கான விருது செ.தன்சினிக்கும் சிறந்த மேடையமைப்பிற்கான விருது மா.மனோப்பிரியாவிற்கும் சிறந்த ஒளியமைப்பிற்கான விருது ம.நிரோஷனிற்கும் கிடைத்துள்ளன.

இவர்களுக்கான விருது வழங்கும் வைபவம் கொழும்பு ஆனந்தகுமாரசுவாமி மாவத்தையில் அமைந்துள்ள ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் மார்கழி 27ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது என்பதைப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (எ)

# நகரசபை உறுப்பினர் மீதான குற்றச்சாட்டு குறித்து விசாரணை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகரசபையின் எமது கட்சி உறுப்பினர் ஒருவர் அந்நகரசபையின் மாட்டிறைச்சிக் கடைக் குத்தகை தொடர்பான கேள்வி நடவடிக்கைகளின் போது முறைகேடாக நடந்துகொண்டதாக அவர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ மாவை சேனாதிராசா அவர்களது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டுகள் சம்பந்தமான ஆவண நிழற்பிரதிகளும் கிடைத்துள்ளமையைக் கருத்திற்கொண்டு ஒரு முழுமையான விசாரணையை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்டவர்களுக்கெதிராகக் காத்திரமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். (எ)

# டிசம்பர் 26 பொது விடுமுறை தினம் இல்லை

(கொழும்பு)

எதிர்வரும் 26ம் திகதியை பொது விடுமுறை தினமாக அறிவிப்பதற்கான எந்த முடிவும் எடுக்கப்படவில்லையென பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 26ம் திகதி வணிக விடுமுறை தினமாக அறிவிக்கும் சாத்தியக்கூறு காணப்படுவதாக முதலாளிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (ச)


## தவறிவிட்டது

புஸ்பநாதன் சாந்தி - தேசிய அடையாள அட்டை இல. 668433197 V

புஸ்பநாதன் துஷியந்தன் - தேசிய அடையாள அட்டை இல. 890832652V

என்பவர்களினுடைய தேசிய அடையாள அட்டைகள் தெல்லிப்பளைக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொடர்பிலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகட்கு: 075039 4251, 0770711050

முகவரி - மு.புஸ்பநாதன் (சின்னராசு)

மின்சார நிலைய வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். (7019)

## விற்பனைக்கு

யாழ்.வீதி ஆனைக்கோட்டை 3ஆம் கட்டையடியில் 1 கடைக் கட்டிடமும் 1 நல்ல தண்ணீர் கிணற்றுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளும் முகவரி:
நல்லதம்பி யோகராசா,
ஆஸ்பத்திரி முன்கடை,
மானிப்பாய்.
P.N.:- 0773205251 (சி-5298)

## அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம் கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

### காசாளர் தேவை

அருச்சனைச் சீட்டு விற்பனை செய்யவும், பற்றுச்சீட்டு எழுதுநராகவும், மற்றும் கோவில் பணிகளில் ஒத்துழைப்பு நல்குபவராகவும், யா.மா.ச. எல்லைக்குள் வதிபவராகவும் இருத்தல் வேண்டும்.

வதிவிடம்,வயது,முன்னைய தொழில் அநுபவம் யாவற்றையும் குறிப்பிட்டு 31.12.2011 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

100, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (7016)

- தேவஸ்தானம்



## கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானம் மகரஜோதி மண்டல பூசை

24.12.2011- ஆஞ்சநேயர் ஜெயந்தி-பகல் அபிஷேகம், அன்னதானம்

26.12.2011- நெய் நிரப்புதல், பேட்டைத் துள்ளல்

27.12.2011- நல்லூர் நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் இருந்து இருமுடி கட்டி பாத யாத்திரை வருதல்

28.12.2011 - நெய் அபிஷேகம்

குறிப்பு :- இந்தியா செல்ல முடியாத பக்தர்கள் எமது ஆலயத்தில் இருமுடி கட்டி படி ஏறலாம் என தெரிவித்துக்கொள்கின்றோம்.

கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்
அறங்காவலரும், குருசாமியும்

## ONE DAY WORKSHOP
### Career Aspirations

- உயர்கல்வியின் போது எவ்வாறான தெரிவுகள் எமது வேலை வாய்ப்புக்கு உறுதுணை புரியும்? அவற்றை தெரிவு செய்வது எவ்வாறு?
- கணனி அடிப்படை பிரயோகம் மற்றும் தொழிற்பாடு
  - Computer system
  - Basic applications
  - Ms Office
- கணனி வலைப்பின்னல் மற்றும் இணையப் பிரயோகம்
  - Computer Network
  - Internet & E-mail
- பல்ஊடக(Multimedia)கற்கைநெறி அறிமுகம்
  - Photoshop
  - Flash
  - MAYA with 3D Modeling
- Auto CAD (Computer Aided Designing)
- Computerized Accounting Packages
- Web Designing + Development
- கணனி வன்பொருள் பற்றிய ஓர் அறிமுகம்

✓ மேற்குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிகளுடன் முகாமைத்துவ கற்கைகள் தொடர்பான அறிமுகத்தினையும் பெற்றுக்கொள்ள முடியும்

✓ மேற்படி பயிற்சியில் பங்குபற்ற நீங்கள் செய்ய வேண்டியது, உங்கள் பெயர், முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு 0777666175 என்ற இலக்கத்திற்கு SMS அனுப்பவும்.

✓ இந்நிகழ்வுற்கான அனுமதிக்கட்டணம் ரூபா 300/=

✓ இந்நிகழ்வில் பங்கு பற்றுவதன் ஊடாக பங்குபற்றியமைக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே! முந்துங்கள் இன்றே

Don't Miss IT (Only for O/L Students) 31/12/2011

மேலதிக சேவைகள்
பாடநெறி கையேடு
மற்றும் மதிய உணவு

இடம் : IDM சாவகச்சேரி
காலம் : 31/12/2011(சனிக்கிழமை)
நேரம் : 9am - 2pm

IDM Nations Campus
Chavakachcheri Branch
Managed by stepinto(pvt)Ltd.

IDM Nations Campus

Sri Lankan Brand for Higher Education

NO: 5, 1/1 Kandy road, Chavakachcheri(Near to Commercial bank) | Tel : 021 7 200 600

# இன்று ஒரு தகவல்

## பக்தி

அரசன் ஒருவன் காட்டுக்குச் சென்றான். அங்கே ஒரு முனிவ ரைப் பார்த்தான்.

அவருக்கு ஏதாவது கொடுத்துவிட்டு வரவேண்டுமென்று ஆசைப்பட்டான். நேராக அவர் அருகில் சென்றான்.

"சுவாமி! என்னிடமிருந்து நீங்கள் எதையாவது ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று கூறினான். அந்த முனிவர் ராஜாவை நிமிர்ந்து பார்த்தார்.

எனக்கு உன்னிடமிருந்து பெறவேண்டியது ஒன்றுமி ல்லை. எனக்கு என்ன தேவையோ அவையெல்லாம் இங்கேயே கிடைக்கிறது. என்னுடைய பசிக்கு உணவு தேவை... இதோ இந்த மரங்கள் எல்லாம் அதற்காகத்தான் பழங்களைத் தருகிறது.

என் தாகத்திற்கு தண்ணீர் தேவை. அதைத் தருவதற்கு இங்கே ஆறுகள் இருக்கிறது.

இந்த மரங்களின் பட்டைகளை நான் ஆடையாக உடுத்திக் கொள்வேன். மரங்கள் தரும் நிழலில் தங்கியிருக்கிறேன். மழை வந்தால் குகைகள் இருக்கிறது. அங்கே போய் தங்கிக்கொள்வேன். இப்படியெல்லாம் இருக்கும்போது உன்னிடமிருந்து நான் பெறுவதற்கு என்ன இருக்கிறது? என்று முனிவர் கேட்டார்.

ராஜா விடவில்லை. "இருந்தாலும் நீங்கள் என்னுடன் அரண்மனைக்கு வரவேண்டும். அங்கே வந்து ஏதாவது பெற்றுக் கொண்டுதான் செல்ல வேண்டும்" என்று பிடிவாதம் செய்ய ஆரம்பித்து விட்டார்.

அவரும் அன்புத் தொல்லை தாங்கமுடியாமல் "சரி" என்று சொல்லி ராஜாவுடன் புறப்பட்டார். இருவரும் அரண்மனைக்கு வந்து சேர்ந்தனர்.

முனிவரை ஒரு பக்கமாக உட்கார வைத்துவிட்டு, அந்த ராஜா பூஜை அறைக்குள்ளே போனார். அங்கே இருந்த சுவாமி படங்களுக்கு முன்னால் நின்று "பகவானே! எனக்குக் குழந்தை இல்லை! ஒரு குழந்தையைக் கொடு! எனக்கு இருக்கிற செல்வம் போதுமானதாக இல்லை! அதனாலே அதிகப்படியான செல்வத்தைக் கொடு! இப்போது ள்ள இராச்சியமும் எனக்குப் போதாது! இதை இன்னமும் பெரிதாக்கு!" என்று வேண்டிக் கொண்டார்.

முனிவர் உடனே அந்த அரண்மனையை விட்டு புறப்பட்டு காட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

அரசன் இதை கவனித்து விட்டு அவர் பின்னாலே ஓடினார்.

"என்ன இது? ஒன்றுமே வாங்கிக் கொள்ளாமல் புறப்பட்டு விட்டீர்கள்" என்றார்.

அதற்கு முனிவர் "பிச்சைக்காரனிடம் பிச்சை வாங்கலாம்" என்றார்.

"யாரை சொல்கிறீர்கள்" என்று அரசன் கேட்டார்.

"உன்னைத்தான் சொல்கிறேன்! இப்போது பகவானிடம் பிச்சைதானே கேட்டுக்கொண்டிருந்தாய்!" என்றார் முனிவர்.

சுவாமி விவேகானந்தர் இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார். எதற்காக இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார்? அதையும் அவரே விபரமாக சொல்கிறார்.

"கடவுளிடம் அன்பு வைப்பதென்பது வேறு! அவரிடம் பிச்சை கேட்பது வேறு! அவர் மேலே உள்ள அன்பு காரணமாக அவரை வணங்குகிறோம்.

ஒரு அழகான இயற்கைக் காட்சியை பார்க்கிறோம். உடனே அது மேலே ஒரு காதல் பிறக்கிறது. உடனே அந்தக் காட்சியிடமிருந்து நீங்கள் எதையாவது எதிர்பார்க்கிறீர்களா? அல்லது அதுதான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறதா?

அது மாதிரிதான் கடவுளையும் நாம் நேசிக்க வேண்டும். அவரை நாம் நேசிக்காமல் இருக்க முடியாது. அதற்குப் பெயர்தான் "பக்தி" என்று சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த ஆசிரியர்கள் மாகாண கல்வி திணைக்களத்தின் முன் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்ட வலயங்களிலும் தீவக வலயத்திலும் பணிபுரிந்து 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்திற்கென விண்ணப்பித்த போதும் இதுவரை தமக்கு இடமாற்றம் கிடைக்கவில்லை எனத் தெரிவித்து பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் நேற்று முன்தினம் மருதனார்மடத்திலுள்ள வடமாகாண கல்வித் திணைக்களத்தின் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

✹ கல்வி அமைச்சினால் கடந்த 2007 ஆம் ஆண்டு டிசெம்பர் 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்று நிருபத்திற்கு அமைவாக இடமாற்றங்கள் உரிய முறையில் வழங்கப்பட வேண்டும்.

✹ ஏனைய மாகாணங்களினால் வழங்கப்படும் ஆசிரியர் இடமாற்றக் காலப்பகுதிக்கேற்ப எமக்கும் இடமாற்றம் வழங்கப்படவேண்டும்.

✹ இதுவரையிலும் புதிய பாடசாலைக்கான நியமனம் வழங்கப்படாமையால் அடுத்த வருட கல்விச் செயற்பாடுகளுக்கான ஆயத்தங்கள் எதனையும் மேற்கொள்ள முடியாதுள்ளது.

✹ 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் 02.01.2012 ஆம் திகதியன்றே வழங்கப்பட வேண்டும்.

✹ வெளிமாவட்டங்களில் பல வருடங்களாகக் கடமையாற்றிய ஆசிரியர்களின் உளநிலை, குடும்ப நிலை, பொருளாதார நிலை என்பவற்றைக் கருத்திற்கொண்டு உரிய முறையில் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும்.

✹ யுத்த காலத்தில் தொடர்ச்சியாகக் கடமையாற்றி பல துன்பங்களையும் அனுபவித்து நலன்புரி நிலையங்களிலும் கடமையாற்றி இதுவரையிலும் இடமாற்றம் பெறாத ஆசிரியர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு இடமாற்றம் வழங்கப்பட வேண்டும்.

✹ வெளிமாவட்டங்களில் பணிபுரிவதனால் அங்கு வழங்கப்படும் பதவி உயர்வுகள், பதவி நிலைகள் என்பவற்றில் புறக் கணிக்கப்படுகின்றோம்.

✹ இதுதவிர நாம் புதிதாக பதவியேற்கும் பாடசாலைகளிலும் சிரேஷ்ட நிலை இல்லாமை காரணமாக ஏற்படலாம்.

எனவே 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தினை உரிய காலப்பகுதியான ஜனவரி 2 ஆம் திகதி அன்று பெற்று தருவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

மேற்குறித்த தமது கோரிக்கைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால் சுழற்சி முறையில் போராட்டத்தில் ஈடுபடவும் தாம் தீர்மானித்துள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

(பா-6)

# தென்னந்தும்புகள் விற்பனைக்கு

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் வழிகாட்டலில் இயங்கும் அல்லாரை தும்புத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் தரமான தென்னந்தும்பு, தென்னந்தும்பிலான உற்பத்தி பொருட்கள் மற்றும் பசளையாக பயன்படுத்தப்படக்கூடிய தென்னந்தும்பு கழிவுகள் என்பன விற்பனை செய்யப்படுகின்றன.

இப்பொருட்களை அல்லாரை தும்புத்தொழில் கூட்டுறவுச்சங்கத்துடன் அல்லது இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் யாழ்.மாவட்ட காரியாலயத்துடன் நேரடியாகவோ அல்லது 021 222 2421 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளமுடியும் என யாழ்.கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார்.

(அ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 65 | 100-120 | 70 |
| பச்சைமிளகாய் | 220 | 150 | 280 |
| தக்காளி | -- | 240 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 30 |
| கோவா | 80 | 80 | 90 |
| கரட் | 80 | 120 | 90 |
| பூசணி | 65 | 40 | 60 |
| புடோல் | 50 | 60 | 70 |
| வாழைக்காய் | 40-45 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 70 | 90 | 70 |
| பாகற்காய் | 120 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 60 |
| பயற்றங்காய் | 140 | 180 | 120 |
| லீக்ஸ் | 50 | 80 | 60 |
| பீற்றூட் | -- | 140 | 140 |
| கறிமிளகாய் | 180 | 200 | 160 |
| முருங்கைக்காய் | -- | - | -- |
| போஞ்சி | -- | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 15-20 | 40 | 20 |
| தேசிக்காய் | 80-90 | 100 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 25 | 25 |

# இராசி பலன்

*24.12.2011*
*(மார்கழி 8, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு*
*அமாவாசை பின்னிரவு 12.13 மணிவரை*
*கேட்டை முற்பகல் 9.41 மணிவரை*
*இராகுகாலம் 9.26-10.56 மணிவரை*
*சுபநேரம் 3.26-4.56 மணிவரை*
*அமாவாசை விரதம்.*

**மேடம்**

மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், பொது வாழ்வில் ஏற்பட்ட வீண் பழிகள் மாறும், தொழில் முன்னேற்றத்திற்கு பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்**

வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகள் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்**

நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், கணவன்-மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**கடகம்**

பகை விலகி பாசம் கூடும் நாள், உடல் நலம் சீராகும், பயணத்தால் பலன் கிடைக்கும், தொழில் விருத்தியுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள், போசன சுகமுண்டு.

**சிங்கம்**

சிறப்பான நாள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறும், பூமியால் இலாபமுண்டு, புதிய நபர்களின் சந்திப்புண்டு, புண்ணிய கருமங்களில் ஈடுபடும் எண்ணம் தோன்றும்.

**கன்னி**

தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு, விருந்தினர் வருகையால் வியப்படையும் நாள், ஆடை, ஆபரணச் சேர்க்கையுண்டு, சுப செய்திகளால் மகிழ்ச்சியடைவீர்கள், வாகன சுகமுண்டு.

**துலாம்**

பாராட்டும் புகழும் கூடும் நாள், குறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், பழைய கடன்கள் திடீரென வசூலாகலாம், உடன்பிறப்புக்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**விருச்சிகம்**

பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், குடும்பத்தினரின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள், திடீர் பயணம் தித்திக்க வைக்கும், பெரிய மனிதர் வீடு தேடி வருவர்.

**தனுசு**

கற்பனைகள் அதிகரிக்கும், தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர், வெளியூர் பயணமொன்று உருவாகலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்**

சுப விரயம் ஏற்படும் நாள், கணபதி வழிபாடு காரிய வெற்றியைத் தரும், உறவினர் வீட்டு சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, காரிய அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கும்பம்**

எதிர்பாராத நன்மைகள் நடைபெறும் நாள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், சமயோசிதப் புத்தியால் பலரையும் கவருவீர்கள், தொலைபேசிமூலம் பொன்னான செய்திகள் வந்து, சேரலாம்.

**மீனம்**

நம்பிக்கைகள் நடைபெறும் நாள், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள வள்ளல்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.

வளவன்

# சிறுவர்-மகளிர் பொலிஸ் பிரிவின் செயற்திறன் விரிவுபடுத்தப்பட வேண்டும்

## ராஜீவ விஜயசிங்க எம்.பி. கருத்து

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் நிலையங்களிலுள்ள சிறுவர் மற்றும் மகளிர் விவகாரங்களுக்கான பிரிவினை விரிவுபடுத்துவதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் என்பனவற்றை கட்டுப்படுத்த முடியும் என ஜனாதிபதியின் ஒருமைப்பாட்டு குழு ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினரும் பேராசிரியருமான ராஜீவ விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டஒருமைப்பாட்டுக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர் துஷ்பிரயோகம்,பெண்களுக்கு எதிரான வன்முறை என்பன சர்வதேச ரீதியாக இடம்பெற்று வருகின்றது.இலங்கையும் அதற்கு விலக்கல்ல.இருப்பினும் இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியமானது.

வடமாகாணத்தில் யாழ். மாவட்டத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் ஏற்கனவே இந்த ஒருமைப்பாட்டுக்குழுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், திணைக்கள அதிகாரிகள், புத்திஜீவிகள், மதத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரையும் அழைத்து இந்தகூட்டம் நடைபெறுகின்றது.

எமது நாட்டைப் பொறுத்தவரை கடந்த கால யுத்த சூழல் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள், பெண்களுக்கெதிரான வன்முறைகள் என்பவற்றை அதிகரிக்க செய்துள்ளது.

போரின் காரணமாக பல ஆயிரக்கணக்கான சிறுவர்கள், பெற்றோர்களை இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இது தவிர பல பெண்கள் கணவன்மாரை இழந்த நிலையில் தனிமையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

உரிய பாதுகாப்பு இன்மையே இத்தகைய துஷ்பிரயோகத்திற்கும் வன்முறைகளுக்கும் காரணம்.

எனவே பொலிஸ் நிலையங்களில் உள்ள சிறுவர் மற்றும் மகளிர் விவகாரங்களுக்கான பிரிவை விரிவுபடுத்தி அதில் மதத் தலைவர்களையும் அரச அதிகாரிகளையும் புத்திஜீவிகளையும் நலன் விரும்பிகளையும் இணைத்து இத்தகைய வன்முறைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தக்கூட்டத்தில் பங்கு கொண்டவர்களினால் யாழ். மாவட்டத்தில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் பாரிய அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும் கலாசாரமும் சீரழிந்துசெல்வதுடன் சமூக சீர்கேடுகளும் அதிகளவில் இடம் பெறுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதேவேளை சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து செல்கின்றது எனவும் பெற்றோர்களின் கண்காணிப்பு குறைவடைவதே பிள்ளைகள் மதுபோதைக்கு அடிமைகளாவதற்கு காரணம் எனவும் அரச அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு உரிய முறையில் பாதுகாப்பு வழங்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா-6)

## சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் சம்பவங்கள் அதிகரிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்தில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதென சமூக ஆய்வாளர்கள் கவலை தெரித்துள்ளனர்.

வன்னி யுத்தத்தின் பின் தமது பெற்றோரை இழந்த பிள்ளைகளும் மற்றும் வறுமை காரணமாக பல நூற்றுக்கணக்கான சிறுவர்கள் வடமராட்சியின் பல இடங்களிலும் இவ்வாறு வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதில் கடற்தொழில், வர்த்தக நிலையங்கள், சிறு தொழிலகங்கள் ஆகியவற்றில் வேலைக்கு அமர்த்தப்பட்டு தமது குடும்ப நிலையை கருத்திற் கொண்டு பாடசாலை கல்வியை இடைநிறுத்திவிட்டு தொழிலுக்கு செல்வதனாலேயே அதிகளவான சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி சிறுவர்களின் எதிர்கால வாழ்வை வளமாக்க முன்வர வேண்டுமென சமூக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.(அ-3-24)

## எம்.ஜி.ஆரின் 24 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

புரட்சித் தலைவர், மக்கள் திலகம், முன்னாள் தமிழக முதல்வருமான அமரர் டாக்டர் எம்.ஜி.ஆரின் 24 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று, நாளை, நாளை மறுதினம் ஆகிய நாட்களில் முப்பெரும் விழாவாக கொண்டாடப்படுகின்றது.

இம்முப்பெரும் விழா அனைத்துலக எம்.ஜி. ஆர் பேரவைத் தலைவர் மதிமுகராஜாவின் 13 ஆவது ஆண்டு நிறைவு நாளையும் இயற்கை அனர்த்தம் சுனாமியின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளையும் இணைத்து நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு எம்.ஜி.ஆர் சிலைக்கு மலர் மாலை அணிவிப்பதுடன் ஆரம்பமாகவுள்ளதோடு இரண்டாம்நாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்றலில் ஆரம்பமாகும்.

இதில் ஆண், பெண், இருபாலாருக்குமான துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி, ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி, மூன்று சில்லு சைக்கிள் ரிக்ஷா ஓட்டப்போட்டி, கழகங்களுக்கான கயிறு இழுத்தல் போட்டி என்பன இடம்பெறவுள்ளன.

மூன்றாம் நாள் திங்கட்கிழமை நிகழ்வில் எம்.ஜி.ஆர் விருது வழங்குதல், கவியரங்கு, பட்டிமன்றம், கரகாட்டம், நாடகம், நடனம், வில்லிசை, மெல்லிசை என்பன நடைபெறவுள்ளன என அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவை அறிவித்துள்ளது. (அ)

## ஒளிவிழா

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச செயலகத்தின் ஒளிவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(நல்லூர்)

கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்தி சங்கமும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கமும் இணைந்து நடத்தும் ஒளிவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் தெற்கு கிராம சேவையாளர் அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-3-134)




## வடமாகாண
## முஸ்லிம் ஆசிரிய உதவியாளர்களை மீண்டும் இணைப்புச் செய்தல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் வசித்து இடம்பெயர்ந்து ஏனைய மாகாணங்களிலுள்ள அரசாங்க பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் வடமாகாண முஸ்லிம் ஆசிரிய உதவியாளர்களை வடமாகாணத்திற்கு மீண்டும் இணைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் அறிவித்துள்ளார்.

இவ்விணைப்பு 07/1241/316/053 இலக்க 2007.07.11 ஆம் திகதி அமைச்சரவைப் பத்திரம் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்ற முஸ்லிம் ஆசிரியர்களை எதிர்வரும் முதலாம் தவணை ஆரம்பத்தில் வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கடமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே உரிய ஆசிரிய உதவியாளர்கள் விண்ணப்பப்படிவத்தினை கடமையாற்றிக் கொண்டிருக்கும் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி செயலாளர், கல்வி அமைச்சு, வடமாகாணத்திற்கு எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார். (அ)

## அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாயன்மார்க்கட்டு பாரதி வீதியை சேர்ந்த ஓய்வு பெற்ற தபால் திணைக்கள உத்தியோகத்தரும் யாழ்.மாவட்ட சமாதான நீதவானுமாகிய இளையதம்பி மயில்வாகனம் அகில இலங்கை சமாதான நீதவானாக நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கினை 6 வருடங்களில் கணிசமான மாணவர்களை சித்தியடையச் செய்த சட்டத்தரணி எம்.ஐ.உவைசூர் ரகுமானும் யாழ். இந்துவின் மைந்தனும் இணைந்து வழங்கவுள்ளனர்.

இக்கருத்தரங்கிற்கு நுழைவுக் கட்டணமாக ரூபா 600 அறவிடப்படும். (அ)

## இன்னிசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

சங்கீத கலாஜோதி நாகேந்திரம் நிருபனின் சிறப்பு இன்னிசை அரங்கு எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாட்டு சங்கீத கலாஜோதி நா. நிருபன், வயலின் இசைக்கலாமணி எஸ்.சோபிதாஸ், மிருதங்கம் சங்கீத கலாஜோதி எம்.கணேசதாசன், கெஞ்சிரா இசைக் கலாமணி என் .சிவசுந்தரசர்மாவும் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் போது ஆசியுரையினை நல்லை ஆதீன 2 ஆவது குருமகா சந்நிதான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆற்றவுள்ளார். (அ)

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை கலட்டிஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான கரவருட விநாயகர் விரத உற்சவம் கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

இவ்விரதம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை பிற்பகல் 3 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி மூல மூர்த்திப்பூஜை, பஞ்சமுக அர்ச்சனை என்பன இடம்பெற்று வருகின்றது என கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் அறிவித்துள்ளது. (அ)

## நுவரெலியாவில் அதிக பனி மூட்டம் காணப்படுகின்றது

(கொழும்பு)

நுவரெலியா பிரதான வீதிகளில் அதிக பனி முகில்கள் சூழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தண்டி நுவரெலியா- வெலிமடை நுவரெலியா மற்றும் ஹற்றன் நுவரெலியா பாதைகளில் அதிக அளவில் பனி படர்ந்து காணப்படுகின்றது.

இதேவேளை, கொழும்பு, பதுளை பிரதான வீதியில் ஹல்தமுல்லை, பெரகலை, ஹப்புத்தளை, கஹகல்லை பகுதிகளில் அதிக பனி முகில்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக இந்த பாதைகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் அவதானமாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளது. (அ)

# அரசாங்கத்தை கவிழ்க்க அரசுக்குள்ளேயே சூழ்ச்சியாளர்கள் உள்ளனர்- தயாசிறி

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு சர்வதேசத்திடமிருந்தோ எதிர்க்கட்சியிடமிருந்தோ சூழ்ச்சிகள் இல்லை. அரசுக்குள்ளேயே சூழ்ச்சியாளர்கள் இருக்கின்றனர் என்பதை நல்லிணக்க ஆணைக்குழு அம்பலப்படுத்தியிருக்கின்றது. எனவே, இந்த அறிக்கைக்கு எதிராக அமைச்சர் விமல் வீரவன்ச ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் உண்ணாவிரதமிருக்க வேண்டும். முடித்து வைக்க இளநீருடன் வருவேன் என்று ஐ.தே.க.எம்.பி தயாசிறி ஜயசேகர கடந்த புதன்கிழமை சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவு திட்ட இறுதி நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தயாசிறி எம்.பி. இங்கு மேலும் கூறுகையில், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையானது உள்நாட்டில் தயாரிக்கப்பட்டதாகும். இந்த அறிக்கையை தாருஸ்மான் தயாரிக்கவில்லை. அத்துடன் தாருஸ்மானின் சகோதரனோ சித்தியின் மகனோ இல்லாவிட்டால் வேறு எவருமோ தயாரித்திருக்கவில்லை.

இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளே தயாரித்துள்ளனர். இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தான் இந்நாட்டில் ஆயுதம் தாங்கிய குழுக்கள் செயற்படுவதாகவும் கடத்தல்கள், காணாமல் போதல்கள், படுகொலைகள் மற்றும் கப்பம் அறவிடுதல் போன்றவற்றுக்கு இந்த ஆயுதக் குழுக்களே காரணம் என்றும் பரிந்துரைத்துள்ளது.

அன்று தாருஸ்மான் அறிக்கைக்கு எதிராக அமைச்சர் விமல் வீரவன்ச உண்ணாவிரதமிருந்தார்.

அதேபோன்று இந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது,

தவறென்றால் அமைச்சர் வீரவன்ச ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் உண்ணாவிரதம் இருக்க வேண்டும்.

தேசத்துரோகம் குறித்துபேசப்படுகின்றது. அப்படியானால் இந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதும் தேசத் துரோகமாகும். அதனைத் தயாரித்த அரச அதிகாரிகளும் தேசத் துரோகிகளாவர். எனவே, வெறுமனே இங்கு கத்துவதில் பயனில்லை.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் இலங்கையில் இடம்பெறுகின்ற விடயங்கள் குறித்து தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. எனவே, அரசாங்கத்துக்கு சர்வதேசத்திடமிருந்தோ இல்லாவிட்டால் எதிர்க்கட்சிகளிடமிருந்தோ சூழ்ச்சிகள், சதிகள் இடம்பெறவில்லை.

அரசாங்கத்துக்குள்ளேயே இந்த சதியாளர்கள், சூழ்ச்சியாளர்கள் இருக்கின்றனர் என்பதை அறிக்கை சுட்டிக்காட்டி நிற்கின்றது.

இந்த அறிக்கையை எடுத்துக் கொண்டு வெளிநாடுகளுக்கு சென்று இலங்கையின் நியாயத்தை முன்வைப்பதற்குமுடியாத நிலைமை வெளிவிவகார அமைச்சருக்கு ஏற்பட்டுள்ளது என்றார். (அ-2)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிய குளங்களை புனரமைக்க நடவடிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிய குளங்களை புனரமைப்புச் செய்து விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் எடுத்துக் கொண்ட முயற்சியின் பலனாக மீளெழுச்சி திட்டத்தின் கீழ் இக்குள புனரமைப்புக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிச்சான்குளம், குஞ்சுக்குளம், புதரிக்குடாகுளம், நாகதேவன் குளம், பெருமான்டன்குளம், பிள்ளையான் குளம், வண்டியான்குளம், புத்துவெடுவன் குளம், றால்குளம், பணிக்கன்குளம், உயிலங்குளம், விடத்தல்குளம், கட்டைக்காடு குளம், பெரியபுளியன்குளம், இளமருதன் குளம், கட்கிடன்குளம், பூக்குளம், முருகாண்டி குளம், மருதமடுகுளம் ஆகிய குளங்கள் காணப்படுகின்றன.

அதில் 4 குளங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய குளப் புனரமைப்பு தொடர்பான ஆரம்பக்கட்ட வேலைகள் இடம்பெறுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்திட்டத்திற்கென 68 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை இவ்வருடத்தில் கிராம உட்கட்டமைப்பு வசதிகளுக்கென 110.8 மில்லியன் ரூபாய்களும் ஆற்றல் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 23.46 மில்லியன் ரூபாய்களும் வாழ்வாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு 86.18 மில்லியன் ரூபாய்களும் அவசர வெள்ளம் மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கென 91.58 மில்லியன் ரூபாய்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களுக்கென தெரிவு செய்யப்பட்ட 5 ஆயிரத்து 136 பேர்களில் ஆயிரத்து 456 பேர்களுக்கான வாழ்வாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காய் , மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், மருதயன்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுகளில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் கூறினார். (அ-2)

# பாரதவின் மெய்ப்பாதுகாவலரே முதலில் துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்டார்

## புலனாய்வு பிரிவினர் அறிவிப்பு

பாரதவின் மெய்ப்பாதுகாவலரே முதலில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். விசாரணைகளின் மூலம் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் இந்தத் தகவலை வெளியிடுவதாக புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தினமன்று முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் முதலில் பாரதவின் மெய்ப்பாதுகாவலரே துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தெரிவித்துள்ளனர்.

கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் புலனாய்வுப் பிரிவினர் இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர். எனினும் இந்தக் குற்றச்சாட்டை பாரத தரப்பு சட்டத்தரணி நிராகரித்துள்ளார்.


முதலில் பாரதவின் மெய்ப்பாதுகாவலரே துப்பாக்கிச் சூடு நடத்தியதாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதற்கான ஆதாரங்கள் எதுவும் கிடையாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் முதலில் காயமடைந்தது பாரதவின் மெய்ப்பாதுகாவலரான ரந்துனுகே காமினியே என சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தாக்குதலுக்கு இலக்காகி சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றுவரும் துமிந்த சில்வாவின் ஒரு கால் மற்றும் ஒரு கை நிரந் தரமாக செயலிழக்கக் கூடிய அபாயம் காண ப்படுவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித் துள்ளனர்.

மருத்துவ அறிக்கைகளை ஆராய்ந்ததன் பின்னர் இந்த தகவல்கள் வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர். துமிந்த சில்வாவின் மூளைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டு காயம் ஏற்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் அடையாள அணிவகுப்பு மூலம் அடையாளம் காணப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)




## வடக்கின் வசந்தம் மின்சாரம் ஜே/244 இற்கு கிடைப்பது எப்போது?

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்து மீளக்குடியமரும் மக்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகின்றது. ஆயினும் வயாவிளான் (ஜே/244) பிரிவிற்குட்பட்ட மீளக்குடியேறிய மக்களுக்கு இது வரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

குறித்த. கிராமசேவகர் பிரிவில் 3 கிராமங்கள் உள்ளன. அதில் வீதியோரமாகவுள்ள 3 குடும்பங்களுக்கு மாத்திரமே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய மக்களுக்கு மின்சாரம் இதுவரையிலும் கிடைப்பதாகவில்லை.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து உயிரை மாத்திரமே உடைமையாகக் கொண்டு மீளக்குடியமர்ந்த நாம் அன்றாடம் கூலிவேலை செய்தே வாழ்ந்து வருகின்றோம். இலவச மின்சாரம் தருவதாக கூறியமையால் அறிந்தவர் தெரிந்தவர்களிடம் கடனை வாங்கியே வீட்டு மின் இணைப்பு வேலைகளை செய்து முடித்தே பல காலங்கள் கடந்து விட்டன. இவ்விடயம் குறித்து மின்சார சபையினரிடம் சென்று பலதடவைகள் கேட்டிருந்த போதிலும் எவ்வித பலனும் கிடைப்பதாக இல்லை.

எங்களுக்கு மாத்திரம் ஏன் இந்த நிலைமை? பாரபட்சம்? அனைத்தையுமிழந்து நடைப்பிணமாக வந்து குடியேறி எமக்கு மின்சாரம் தருவதாக கூறி எம்மை கடன்காரர்கள் ஆக்கியதில் என்ன பயனைக் கண்டு விட முடியும்?

இனியாவது எமது நிலைமையைக் கருத்திற் கொண்டு உரிய தரப்பினர் மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா?

*-பாதிக்கப்பட்ட மக்கள்-*

# முல்லேரியா சம்பவத்தை இரண்டு வழக்குகளாக தொடர ஆலோசனை

முல்லேரியாவில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பாக இரண்டு வழக்குகளைத் தொடருமாறு கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு நேற்று ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வர் கொலை செய்யப்பட்டமை மற்றும் துமிந்த சில்வாவிற்கு காயம் ஏற்படுத்தியமை ஆகியன இரண்டு சம்பவங்கள் என்வும் இந்த இரண்டு சம்பவங்களையும் ஒன்றாக விசாரணை செய்வது சிக்கலைத் தோற்றுவித்துள்ளதாகவும் கொழும்பு மேலதிக நீதவான் தெரிவித்துள்ளார்.

எனினும் இச்சம்பவம் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவேண்டியுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஷாம் அபேசேகர நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் பாதுகாவலர் ஒருவரையும் மற்றும் துமிந்த சில்வாவின் பாதுகாப்பிற்காக இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உள்ளிட்ட 3 பேரை சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

முல்லேரியா படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 18 சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் 10 பேர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளது.

மேலும் இவ்வழக்கில் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் பாதுகாப்பிற்காக இருந்த பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்து இந்தப் பிரச்சினையை மேலும் குழப்புவதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முயற்சிப்பதாக பாரத லக்ஸ்மனின் உறவினர்கள் சார்பாக பிரசன்னமாகிய சட்டத்தரணிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அதேபோன்று பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கைது செய்தமை தொடர்பில் அவரின் சட்டத்தரணிகள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

மேற்படி சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்ய அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளரால் கண்டறியப்பட்ட விடயங்களே காரணமாக அமைந்ததென குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். (அ-2)

# புதிதாக விடுதிகளை ஆரம்பிக்கும்போது சுற்றுசூழல் பிரிவின் அனுமதி பெறப்படவேண்டும்

## யாழ்.மாநகர சுற்றுசூழல் பிரிவு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சூழலை மாசுபடுத்தும் விதத்தில் இயங்கி வரும் விடுதிகள் தொடர்ந்தும் இயங்குவதற்கு அனுமதிக்க முடியாது என யாழ். மாநகர சபையின் சுற்றுச்சூழல் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ். மாநகரசபைக்குட்பட்ட விடுதி உரிமையாளர்களுடனான கலந்துரையாடலின் போதே மேற்படி பிரிவு இவ் அறிவிப்பை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் பெருகி வரும் விடுதிகள், நிறுவனங்கள் பொறுப்பற்ற வகையில் நகரத்தில் கழிவுகள் அகற்றப்படாமையால் யாழ்.மாநகரசபையால் யாழ் நகரை அழகுபடுத்துவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

புதிதாக ஆரம்பிக்கப்படும் விடுதிகள் சுற்றாடல் பிரிவின் அனுமதி பெற்ற பின்பே கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

சட்டவிரோத கழிவகற்றல் அதாவது திண்ம, திரவ கழிவுகளை முறை யான வகையில் அகற்றுவதற்குரிய வசதிகள் விடுதிகளில் காணப்பட வேண்டும்.

சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் விடுதிகளின் அறைகளின் எண்ணிகையிலேயே தங்கியுள்ளது. 20 அறைக்கு மேற்பட்டவிடுதிகளுக்கு ஒருவருடமும் 20 அறைக்குட்பட்ட விடுதிகளுக்கு 3 வருடமும் 5 அறைக்குட்பட்ட விடுதிகளுக்கு 3 வருடமும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திர காலம் முடிவடைந்தபின் புதுப்பிக்கப்படல் வேண்டும்.

சில விடுதிகள் தான்தோன்றித்தனமாக செயற்பட்டு வருகின்றன. தென்பகுதியில் இருந்துவரும் சுற்றுலாப் பயணிகளை ஒரே அறையில் தங்க வைப்பதோடு அவர்களின் வாகனத்தை வீதியோரத்தில் தரித்துநிற்க விடுகின்றனர். இதனால் அவ்வீதியால் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எவ்வித ஆயத்தம் மற்றும் அனுமதியும் இன்றி தங்குமிட விடுதி நடத்துகின்றனர். இவ்வாறான விடுதிகளுக்கு விடுதிகளின் சுகாதாரத்தின் தரத்தை ஆராயாது உரிமம் வழங்க முடியாது.

இவ்வாறான விடுதி சட்ட விதி முறைகளை மீறுபவர்ளுக்கு 10 ஆயிரத்திற்கு குறையாத தண்டப்பணமும் ஒரு வருடத்திற்கு குறையாத சிறைத்தண்டனையும் உரிமம் இல்லாத விடுதியை ஒரு வருடத்திற்கு இடை நிறுத்தவும் நீதி மன்றத்துக்கு அதிகாரம் உண்டு எனவும் தெரிவித்துள்ளது.

(அ-4)

# 4 ஆயிரம் கூரை, தரைவிரிப்புக்களை புதுக்குடியிருப்புக்கு அனுப்ப கோரிக்கை

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் பயன்படுத்துவதற்கு வசதியாக 2 ஆயிரம் கூரை விரிப்புக்களையும் 2 ஆயிரம் தரை விரிப்புக்களையும் அவசரமாக அனுப்பி வைக்குமாறு புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் முல்லைத்தீவு அரசாங்க அதிபரை கேட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்காலிக குடிசைகளிலும் ஓலைக் குடிசைகளிலும் வாழ்ந்து வரும் மக்களின் வசிப்பிடங்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதனால் இருக்க இடமின்றி மோசமான நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் ஈரமான நிலத்தில் படுத்துறங்குவதால் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாக வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இவர்களின் பரிதாபகரமான நிலையை உணர்ந்து கொண்ட புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் 2 ஆயிரம் கூரை விரிப்புக்களையும் 2 ஆயிரம் தரை விரிப்புக்களையும் அவசரமாக அனுப்பி வைக்குமாறு முல் லைத் தீவு அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளார்.

இதேவேளை இப்பிரதேசத்திலுள்ள சில வீதிகளுக்கு குறுக்கே பாய்ந்தோடிய வெள்ளம் குறைந்துள்ளதால் தற்பொழுது போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளது.

(அ-2)

# வெள்ளைவான் குழுவினரால் 4கோடி ரூபா பணம் கொள்ளை

(கொழும்பு)

சுமார் 5 பேர் கொண்ட குழுவினர் வெள்ளைவானில் சென்றிருந்ததாகவும் வெள்ளைவானில் சென்ற குழு ஒன்று கடந்த புதன்கிழமை மட்டக்குளிய பிரதேசத்தில் 4 கோடி ரூபா பணத்தை கொள்ளையிட்டுச் சென்ற சம்பம் தொடர்பாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று முன்தினம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கொழும்பு புறக்கோட்டை புதிய சோனக தெருவில் உள்ள வர்த்தக நிலையத்திற்கு சொந்தமான பணமே கொள்ளையிடப்பட்டுள்ளது.

கொள்ளையிடப்பட்ட பணத்தில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் யூரோக்கள், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இலங்கை ரூபாய் கள், 60 சிங்கப்பூர் டொலர்கள், 30 சுவிஸ் பிராங் போன்ற நாணயங்கள் இருந்துள்ளன.

வர்த்தக நிலையத்தின் உரிமையாளரின் உறவினரும் ஊழியர் ஒருவரும் வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு பணத்தை எடுத்துக்கொண்டு உரிமையாளரின் வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர். இதன் போது இந்த பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

சுமார் 5 பேர் கொண்ட குழுவினர் வெள்ளை வானில் சென்றிருந்ததாகவும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்மை வானில் ஏற்றி வாயில் பிளாஸ்டரை ஒட்டிவிட்டு கடுமையாக தாக்கிய பின்னர் வத்தளை பிரதேசத்தில் தம்மை கைவிட்டுச் சென்றதாக கொள்ளையர்களின் பிடியில் இருந்து தப்பிய இருவரும் தெரிவித்துள்ளனர்.

(அ-2)

# விவசாய ஓய்வூதிய கொடுப்பனவு இதுவரை கிடைக்கவில்லை

(கொழும்பு)

விவசாயிகளுக்கான ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கான நிதி திறைசேரியிடமிருந்து இதுவரை கிடைக்கப் பெறவில்லையென விவசாய காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர், டிசெம்பர் ஆகிய இரு மாதங்களுக்குரிய ஓய்வூதியத்தை செலுத்துவதற்கான நிதி சபையிடம் இல்லையென விவசாய காப்புறுதி சபையின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

திறைசேரியிடமிருந்து இந்த நிதி கோரப்பட்டுள்ள போதிலும் இதுவரை கிடைக்கவில்லையெனவும் குறித்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

சுமார் 91 ஆயிரம் விவசாயிகளுக்கான விவசாய ஓய்வூதியம் செலுத்தப்படவேண்டியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒக்டோபர் மாதத்திற்கு பின்னர் இதுவரை விவசாயிகளுக்கான ஓய்வூதியம் செலுத்தப்படவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# இரண்டு நீர்மின் நிலையங்களை உருவாக்குவதற்கு திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் மேலும் இரண்டு சிறிய நீர்மின் நிலையங்கள் உருவாக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக 3.6 மில்லியன் ரூபாய்கள் முதலீடு செய்யப்படவுள்ளன.

பலாங்கொடை-ஊவாதென்னை மற்றும் இரத்தினபுரி -கடுருகஸ்கொட பிரதேச்ங்களில் இந்த நீர்மின் நிலையங்கள் உருவாக்கப்படவுள்ளன.

சூழலுக்கு ஆதரவான சக்தி வள அபிவிருத்தி நிறுவனம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

(அ-2)

# ரணிலுக்கு எதிராக செயற்படும் தொண்டு நிறுவனம் குறித்து விசாரணை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக செயற்படும் ஜேர்மன் தன்னார்வத்தொண்டு நிறுவனம் குறித்து அரசாங்கம் விசாரணை நடத்தத் தீர்மானித்துள்ளது.

தம்மை தலைமைப் பதவியிலிருந்து வெளியேற்றுவதற்காக ஜேர்மனிய தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்று பாரியளவில் பணத்தை செலவிட்டு வருவதாக ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனம் குறித்து பாராளுமன்றம் விசாரணை நடத்த வேண்டுமென கோரியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஜேர்மன் நிறுவனத்தின் உதவியை பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் கிளர்ச்சிக்குழுவிற்கு ஜேர்மனும் மேலும் இரண்டு நாடுகளும் உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை கிளர்ச்சிக்குழுவினர் நிராகரித்துள்ளனர்.

அரசியல் இலாபத்திற்காக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படுவதாக கிளர்ச்சிக் குழுவினர் தெரிவித்துள்ளனர். இதேவேளை வரவு செலவுத்திட்ட மூன்றாம் வாசிப்பு விவாதத்தின் நிறை வில் சபாநாயகரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நடைபெற்ற விருந்துபசாரத்தில் வெளிநாட்டு சக்திகளின் தலையீடுகள் குறித்து ஜனாதிபதி எதிர்க்கட்சி தலைவரிடம் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறான ஓர் பின்னணியில் கிளர்ச்சியாளர்களுக்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படக் கூடிய சாத்தியம் கிடையாது என அரசியல் வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ-2)



# சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டு பிக்குவுக்கு எதிராக விசாரணை

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலண்டன் தேம்ஸ் பௌத்த விஹாரையின் தலைமை பிக்கு வண.பஹலகம சோமரத்னவுக்கு எதிரான விசாரணைகள் எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிக்கு 16 வயது பெண்ணை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளமை மற்றும் பெண்ணை முறை தவறான வகையில் தாக்கியமை போன்றவை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

அத்துடன் முறை தவறான தாக்குதல் ஒன்று தொடர்பில் கடந்த நவம்பர் 11 ஆம் திகதி மற்றுமொரு குற்றச்சாட்டும் பிக்குவின் மீது சுமத்தப்பட்டது. இந்தநிலையில் நேற்று முன்தினம் Isleworth Crown நீதிமன்றத்தில் 65 வயதான இந்த பிக்கு மீதான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எனினும் இதன்போது கருத்து வழங்கிய குறித்த பிக்கு தம்மீதான குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நிராகரித்துள்ளார். (அ-2)

# பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்களுக்கு தடை

## ஜே.வி.பி.கண்டனம் தெரிவிப்பு

(கொழும்பு)

தனியார் பல்கலைக்கழக அமைப்புக்கு எதிராக மாணவர்கள் போராட்டங்களை முன்னெடுத்தமைக்கு எதிராக கடந்த வாரம் பெரதெனிய பல்கலைக்கழகத்தின் அனைத்து மாணவர் சங்கங்களும் தடை செய்யப்பட்டன.

இந்நடவடிக்கைக்கு எதிராக ஜே.வி.பி.தனது கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அரசாங்கம் குறித்த மாணவர் சங்கங்களை தடை செய்ததன் மூலம் ஜனநாயக விரோத செயல் ஒன்றை மேற்கொண்டுள்ளதாக ஜே.வி.பி.தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இது குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்தபோது,

இந்த நடவடிக்கை மூலம் அரசாங்கத்தின் தெளிவான அரசியல் நகர்வையே எடுத்துக் காட்டுகிறது.

இதன் மூலம் தனியார் பல்கலைக்கழக முறையை ஏற்படுத்தும் சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்துவதாகவும் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

எனினும் தனியார் பல்கலைக் கழக அமைப்புக்கு எதிராக ஜே.வி.பி.தொடர்ந்தும் போராட்டம் நடத்தும் என்று ஹந்துன்நெத்தி எச்சரித்துள்ளார். (அ-2)

# தனது குடும்பத்தவரை நெருப்பால் சுட்டு காயப்படுத்தியவர் கைது

(கொழும்பு)

ஹப்புத்தளை பிரதேசத்தில் தனது மனைவியையும் இரு பிள்ளைகளையும் நெருப்பால் சுட்டு காயப்படுத்திய நபர் ஒருவரை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி பண்டாரவளை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஹப்புத்தளை தங்கமலை 2 ஆவது பிரிவு தோட்டத்தில் வசிக்கும் (வயது 33) நபர் ஒருவரே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் தனது 11 வயது மகள் மற்றும் 5 வயது மகளின் கைகளை நெருப்பு கொள்ளியால் பலத்த காயத்திற்கு உட்படுத்தியதுடன் தனது மனைவியையும் துன்புறுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சிறுமிகள் இருவரும் பதுளை பொது வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# கல்முனையில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பேருந்து வண்டியொன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் இவ்விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த முனைக்காடு, கொக்கட்டிச்சோலை பிரதேசங்களைச் சேர்ந்த இருவரே விபத்துக்குள்ளாகியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான இருவரும் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். காயமடைந்தவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளதுடன் இவ்விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# 2011.12 24 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ☆ 1690-யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துமஸ் இரவு ஆராதனைக்காகக் கூடியிருந்த சுமார் 300 கத்தோலிக்கர்கள் டச்சுப் படைகளினால் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்.
- ☆ 1715-சுவீடனின் துருப்புகள் நோர்வேயை ஆக்கிரமித்தன.
- ☆ 1777-கிரிட்டிமட்டி தீவு ஜேம்ஸ் குக்கினால் கண்டறியப்பட்டது.
- ☆ 1851-வோஷிங்டன் டிசியில் காங்கிரஸ் நூலகம் தீப்பிடித்ததில் பெறுமதியான நூல்கள் அழிந்தன.
- ☆ 1906-ரெஜினால்ட் ஃபெசெண்டென் உலகின் முதலாவது வானொலி நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கினார்.
- ☆ 1914-கிறிஸ்துமஸ் தினத்துக்காக முதலாம் உலகப் போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.
- ☆ 1924-அல்பேனியா குடியரசாகியது.
- ☆ 1941-இரண்டாம் உலகப் போர்: ஹொங்கொங் ஜப்பானியப் படைகளிடம் விழ்ந்தது.
- ☆ 1941-இரண்டாம் உலகப் போர்: மலேசியாவின் சரவாக் மாநிலத் தலைநகர் கூச்சிங் ஜப்பானியரிடம் வீழ்ந்தது.
- ☆ 1951-லிபியா இத்தாலியிடம் இருந்து சுதந்திரம் பெற்றது. முதலாம் ஐட்ரிஸ் லிபிய மன்னனாக முடி சூடினார்.
- ☆ 1953-நியூசிலாந்தில் டாங்கிவாய் என்ற இடத்தில் தொடரூந்து மேம்பாலம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் அதில் சென்று கொண்டிருந்த தொடரூந்து ஆற்றில் வீழ்ந்ததில் 153 பேர் உயிரிழந்தனர்.
- ☆ 1954-லாவோஸ் சுதந்திரம் பெற்றது.
- ☆ 1966-தெற்கு வியட்நாமில் அமெரிக்க இராணுவ விமானம் ஒன்று வீழ்ந்ததில் 129 பேர் உயிரிழந்தனர்.
- ☆ 1968-மூன்று விண்வெளி வீரர்களை ஏற்றிச் சென்ற அப்பல்லோ 8 விண்கலம் சந்திரனின் சுற்று வட்டத்தில் நுழைந்தது.
- ☆ 1974-அவுஸ்திரேலியாவில் டார்வின் நகரில் சூறாவளி ட்ரேசி தாக்கியதில் 71 பேர் உயிரிழந்தனர்.
- ☆ 1979-ஆப்கானிஸ்தானின் கம்யூனிச அரசைக் காப்பதற்காக சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானை முற்றுகையிட்டது.
- ☆ 1979- ஐரோப்பாவின் முதலாவது விண்கலம் ஆரியான் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- ☆ 2005-இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு தேவாலயம் ஒன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

### பிறப்புக்கள்

- ☆ 1818-ஜேம்ஸ் பிரிஸ்காட் ஜூல், ஆங்கில இயற்பியலாளர்(இ.1889)
- ☆ 1822-சார்ள்ஸ் ஹெர்மைட் ஒரு பிரெஞ்சு கணிதவியலர் (இ.1901)
- ☆ 1837-பவேரியாவின் எலிசபெத், ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரியின் அரசி (இ.1898)
- ☆ 1924-முகமது ரபி, புகழ்பெற்ற இந்தியப் பின்னணிப் பாடகர் (இ.1980)
- ☆ 1957-ஹாமித் கர்சாய், ஆப்கானிஸ்தான் குடியரசுத் தலைவர்
- ☆ 1959-அனில் கபூர்,இந்திய நடிகர்
- ☆ 1971-ரிக்கி மாட்டின், ஸ்பானியப் பொப் பாடகர்

### இறப்புக்கள்

- ☆ 1524-வாஸ்கோடகாமா, போர்த்துக்கீச மாலுமி (பி.1460)
- ☆ 1973-ஈ.வெ.இராமசாமி, திராவிடர் கழகத்தினை தோற்றுவித்தவர் (பி.1879)
- ☆ 2005-பி.பானுமதி, தமிழ்த் திரைப்பட நடிகை (பி.1925)
- ☆ 2008-ஹரோல்ட் பிண்டர், நோபல் பரிசு பெற்ற ஆங்கில எழுத்தாளர் (பி.1930)

### சிறப்பு நாள்


- ☆ லிபியா -சுதந்திரதினம் (1951)



☆ தமிழ் நாட்டின் முதலமைச்சரும் திரைப்பட நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் நினைவு தினம் (பி.1917)

# திராட்சையில் பீடைகளும் முகாமைத்துவமும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

17-I

*வாருங்கள் எம்மினிய உறவுகளே!*

வட பகுதி விவசாயத்தின் சிறப்புக்களில் தனித்துவமான பழப்பயிர் செய்கையாக திராட்சை செய்கைகையை குறிப்பிடலாம். காலம்காலமாக இப் பழச் செய்கையில் எங்களூர் விவசாயப் பெருமக்கள் ஈடுபடுவதுடன் அதிலிருந்து மதிப்பேற்றஞ் செய்து பெறப்படும் பலவகையான குடிபானங்கள் விவசாயஞ் சார்ந்த கைத்தொழிலாக மிளிர்வதனையும் இதன் மூலம் பல விவசாயக் குடும்பங்களின் வாழ்க்கை மேம்பட்டு இருப்பதையும் குறிப்பிடலாம். வட பகுதி விவசாயிகளுக்கென்று தனித்துவமான முத்திரையுடன் திராட்சை பழசெய்கை இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுவது சிறப்புக்குரியதும் பெருமைக் குரியதுமாகும்.


குறிப்பாக கடந்தகால அசாதாரண சூழ்நிலைகளிலும் எங்களூர் விவசாயப் பெரும்மக்கள் திராட்சை செய்கையை கைவிடாது தொடர்ந்து மேற்கொண்டு வருதல் மெச்சுதல் தகும். இன்னும் பலரும் இப்பயிர்ச்செய்கையில் ஆர்வம் காட்டுவதும் அதன் மூலம் அவர் தம் வருவாயை பெருக்கிட வழி பிறந்திருப்பதனையும் குறிப்பிட்டுக் கூறலாம்.

இவையனைத்திலும் எம்மவர்கள் காட்டும் விருப்பத்திற்கும் விவேகத்திற்கும் இடையூறாக பீடைகளின் தாக்கமும் அவற்றினாலேற்படுத்தப்படும் சேதங்களும் அமைந்து விடுகின்றன. இப்பீடைகளைப் பற்றிய அறிவும் அவற்றினால் எப்போது எப்படி சேதமேற்படுகின்றது என அறியும் பட்சத்தில் **வருமுன் காப்போம்** எனும் வாக்குக்கிணைவாக பீடைகளை பெருகவிடாது தடுக்கவும் அவற்றை இலகுவாக கண்காணிக்கவும் மேலும் கட்டுப்படுத்தவும் முயற்சிகளை மேற்கொள்ள முடியும். திராட்சை கொடிக்கென உள்ள தனித்துவமான பீடைகளை இனங்கண்டு கட்டுப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

அத்துடன் திராட்சை செய்கையாளர்களுக்கு இப் பீடைகள் பற்றிய தகவல்களை கொடுப்பதுடன் அதன் மூலம் அவர்களது அறிவினை விருத்தி செய்வதும் இத்தொடரினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

### திராட்சையில் கராவல்

திராட்சைப் பழங்களை அறுவடை செய்யும் போது அதில் கராவல் போன்று மண்ணிற நிறத்தில் காணப்படுவதால் திராட்சைப் பழங்களுக்கான சந்தை விலை குறைவடைவதும் சில வேளைகளில் பழங்கள் வளர்ச்சியடையாது சிறியனவாக இருப்பதுடன் வெடித்தும் காணப்படும். இப் பிரச்சினை திராட்சை காய்நிலையிலிருக்கும் போதே காணப்பட்டு பின் அது பழுக்கும் போது தோல் பகுதி விரிவடைய முடியாது. அவ்விடத்தில் வெடித்திருக்க காணப்படும். இவ்வாறான தோற்றமளிப்பதற்கான காரணம் ஒரு வகை பனிப்பூச்சியாகும்.



Graperine thirps

<u>Scirtothrips</u> <u>dorsalis</u>

### எது காரணம்?

திராட்சை பழங்களில் கராவல் போன்ற சேதத்திற்கு பனிப்பூச்சி காரணம். இதனை <u>சிர்ரோதிரிப்சு</u> <u>போசாலிசு</u> (<u>Scirtothrips</u> <u>dorsalis</u>) என அழைக்கின்றனர். இப்பனிப்பூச்சி திராட்சையில் மட்டும் சேதத்தை ஏற்படுத்துவதல்ல. மாறாக இவ்வகை இப்பெயருக்குரிய பனிப்பூச்சி மிளகாய், மாதுளை, நிலக்கடலை என பல பயிர்களில் சேதத்தை ஏற்படுத்தவல்லது. ஆனாலும் இதனது முதலிரு புழு பருவங்களும் நிறைவுடலியும் சேதமேற்படுத்தும் பருவங்களாதலால் இவற்றினது சுரண்டியுறிஞ்சும் வாயுறுப்பின் உதவியால் திராட்சையில் வளரும் இலையில் பூந்துணரில் சேதத்தை ஏற்படுத்துகின்றன. இளம் இலைகளை உங்களது புறங்கையில் அடித்துப் பார்க்கும் போது இப்பனிப்பூச்சி கையில் ஓடுவதனைப் அவதானிக்கலாம்.

இவற்றி னது அதீத சேதத்தினால் இலைகள் சிறுத்தும் சுருங்கியும் காணப்படும். இதைவிட பூந்துணரில் காய் பிடிக்க ஆரம்பமாகும் போது இப் பனிப்பூச்சி இலகுவாகவளரும். இளம் காய்களில் சுரண்டிஉறிஞ்சுவதால் அதிலுள்ள கலங்கள் இறந்துவிடுகின்றன. இறந்த கலங்கள் இறந்தவையாகவே இருக்க திராட்சை காயின் ஏனைய தோற் பகுதி விருத்தியடைந்து செல்லும். இதனால் இறந்த கலங்கள் மண்ணிற நிறமாக கராவல் போன்று தோற்றமளிக்கும்.

### முகாமைத்துவப்படுத்துவது எப்படி?

மிளகாயில் இதே பனிப்பூச்சியை எங்ஙனம் கட்டுப்படுத்துவது என பார்த்திருந்தோம். இங்கே இப்பனிப்பூச்சிக்கான விருந்து வழங்கிகளாக இருக்கும் இருவித்திலை களைகளை முழுமையாக அகற்றுதல் வேண்டும். பொதுவாக மழைக்காலங்களில் இப்பனிப்பூச்சியின் தாக்கம் பெரிதாக இருக்காது. இருப்பினும் தொடர்ச்சியாக வெயில் எறிக்கும் காலமாகில் இதனது தாக்கம் இலையில் இருக்கும். இப்பனிப்பூச்சிகள் கூட்டுப்புழுவாக மண்ணின் மேற்பரப்பிற்கு செல்வதால் மேற்பரப்பை மூடி பிளாஸ்ரிக் விரிப்பை(Plastic Mulching) இடுவதன் மூலம் கூட்டுப்புழுவாதலையும் களைகளையும் கட்டுப்படுத்தலாம். சேதம் காய்களில் அதிகமாவதை தடுக்க காய்பிடிக்கும் காலத்தில் ஊடுபுகுந்து தாக்கும் பூச்சிநாசிகளான இமிடாகுளோர் பிறிற்று, பைபுரேனில், டைமீதோயேற்று ஆகியனவற்றை மாற்றி விசிறியும் கட்டுப்படுத்தலாம். எதற்கு தொடர்ச்சியான கண்காணிப்பு அவசியமாகும். இதற்காக மெல்லிய நீலம் மற்றும் மஞ்சள் நிற ஒட்டுப்பொறி(Colour Sticky trap) வைத்து அவதானிக்கலாம். எங்கும் கவனிப்பு இன்றேல் எதனையும் கட்டுக்குள் வைத்திருப்பது கடினம்.

(தொடரும்)

**எம்மினிய திராட்சை செய்கையாளர்களே!,**

**உங்களது சந்தேகங்களையும் கருத்துக்களையும் வலம்புரிக்கு எழுதுங்கள் அவற்றுக்கான பதில்களை இதனூடாக தருவோம்.**

## பொன்சேகாவின் விடுதலை குறித்து
## அவரது குடும்பமே ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்க வேண்டும்-ஹெகலிய

(கொழும்பு)

சரத் பொன்சேகாவை விடுவிப்பது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் மட்டுமல்லாது அதிகமான எம்.பி.க்கள் ஜனாதிபதியை சந்திக்கும் போது கோரிக்கை விடுப்பதும் கலந்துரையாடுவதும் வழமையாகும்.

ஆனால் அது தொடர்பான தீர்மானம் எடுக்கும் முழுமையான அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எனினும் சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பில் அவரின் குடும்ப உறுப்பினர்களே ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்க வேண்டும். அது தான் சட்ட நடைமுறையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ-2)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாண கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் பகுதி நேர ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர்களுக்கான ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31ஆம்திகதி சனிக்கிழமையுடன் முடிவடைகின்றது. எனவே இவ் ஒப்பந்தகாலத்தினை நீடிப்பதற்கான விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஒப்பந்தத்தை நீடிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாண கல்வி வலயத்தில் பெற்று தாம் கடமையாற்றும் பாடசாலை அதிபரின் சிபார்சுடன் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.வை. ரவீந்திரன் அறிவித்துள்ளார். (அ)

## துமிந்தவிற்கு கையொன்றும் காலொன்றும் செயற்படாது
### மருத்துவ அறிக்கையில் தகவல்

(கொழும்பு)

முல்லேரியா துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் காயமடைந்த கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் ஒரு கையும் ஒருகாலும் நிரந்தரமாக முடங்கியிருக்கும் என மருத்துவஅறிக்கைகள் தெரிவிப்பதாக குற்றப் புலனாய்வுப் பணியகம் (சி.ஐ.டி) நேற்று முன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தினால் துமிந்த சில்வாவின் மூளையிலும் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் துமிந்த சில்வாவுக்கு மூளை சத்திரசிகிச்சை செய்த டாக்டர் மஹேசி விஜேசேகரவினால் தயாரிக்கப்பட்ட மருத்துவ அறிக்கை குற்றப்புலனாய்வுப் பணியகத்தின் உதவி பொலிஸ் அத்தியட்சகரால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொல்லப்பட்டமை தொடர்பான இவ்வழக்கில் நீதிமன்ற உத்தரவின்படி துமிந்த சில்வாவின் மருத்துவ அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதேவேளை சாட்சியங்களின் படி இப்படுகொலைச் சம்பவத்தில் முதலாவது துப்பாக்கிப் பிரயோகம் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரின் ஆயுதத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது என குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

பிரேமச்சந்திர மற்றும் துமிந்த சில்வா ஆகியோரின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த அமைச்சரவை பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த 3 உத்தியோகத்தர்களும் இக்கொலை தொடர்பான சந்தேகநபர்களாக கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் சி.ஐ.டி தெரிவித்தது. இவ்வழக்கு விசாரணை ஜனவரி 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கருணைக்கு பேதமில்லை



ஆன்மீகம் 01

ஒரு உயிர் முழுமையாக வளர, அதற்கேற்ப உடல் தேவைப்படுகிறது. நமது உடலை, நமது உயிரை, ஒரு உயர்ந்த நிலையில் கொண்டு செல்ல, வாழ்க்கையில் பல விடயங்கள் செய்ய வேண்டியுள்ளது. ஆனால், பிறக்கும் போதே ஏதோவொரு நோயோ அல்லது குறையோ உடலில் இருந்தால், அது நமது உயிரை முழுமையாக வளரவிடாமல் செய்யவும் வாய்ப்பிருக்கிறது. அல்லது நல்ல விதமாகப் பிறந்திருந்தாலும் ஏதோ ஒரு நோயாலோ அல்லது உடலில் அடிபட்டோ நமது உயிர் முழுமையாகச்செயற்பட வாய்ப்பில்லாத நிலை ஏற்படலாம். 50,60 வருடங்களுக்கு முன், அதாவது 1947-ல் நமது நாட்டில் ஒரு மனிதனின் சராசரி வயது 28 ஆக இருந்தது. மனிதன் வெறும் 28 வருடங்கள் மட்டும்தான் வாழ்ந்தான். ஆனால், தற்போது மருத்துவமும் விஞ்ஞானமும் வளர்ச்சியடைந்திருப்பதால் இந்தியாவில் ஒரு மனிதனின் சராசரி வயது 64 ஆக உயர்ந்திருக்கிறது. அப்படியிருந்தாலும் பல நோய்களுக்கு இன்று நம்மிடையே மருந்தில்லை. எத்தனை விதமான மருந்துகளை நாம் கண்டு பிடித்தாலும், புதுப்புது சவால்கள் நோய் வடிவில் நம்மை எதிர்கொள்கின்றன. தொடர்ந்து இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலைகளில் தேவையற்ற உணர்வுகளும், பதற்றங்களும், எதிர்ப்புகளும் சமூகத்தில் தலையெடுக்கின்றன. இந்தச் சவால்களை சமாளிப்பது எப்படியென்று புரிந்துவிட்டால் அவை பெரிய விடயங்களாக இருக்காது.

தற்போது உலகெங்கும் பரவியுள்ள எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் நோயினால் சமூகத்தில் மிகப் பெரிய எதிர்ப்பு மனப்பான்மை உருவாகியுள்ளது. அடிப்படையாக இது எந்த விதமான நோய்? ஏன் வருகிறது? இந்த நோய் வந்தால் என்ன செய்வது? மற்றொருவருக்கு இந்த நோய் எப்படிப் பரவுகிறது? போன்றவை புரியாததால்தான் சமூகத்தில் இந் நோய் குறித்து எதிர்ப்பு நிலை ஏற்படுகிறது. அயல் நாடுகளில் இந்த நோய் குறித்த அறிவு இருப்பதால் அங்கே எதிர்ப்பு நிலை பெரிதாய் இல்லை. ஆனால், இந்தியாவில் எதிர்ப்பு நிலை அதிகம் என்பதால் அந்நோய் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவது மிக அவசியம். எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் நோயால் மட்டும் பாதிப்பு வரும் என்றில்லை. மனிதன் பல நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கிறான். இந்த நோயால் பாதிப்பு வந்ததா? அல்லது அந்த நோயால் பாதிப்பு வந்ததா? என்பது முக்கியமல்ல. பாதிப்பென்றால் பாதிப்பு தான். ஒரு மனிதன் பாதிக்கப்பட்டிருந்தால் பாதிப்பிலிருந்து அவனை எப்படி மீட்டெடுப்பது என்பதே முக்கியமானது.

சிலர் உண்ண உணவில்லாமல் பாதிப்பில் இருக்கிறார்கள், சிலரோ அதிகமாக சாப்பிட்டதால் பாதிப்பில் இருக்கிறார்கள். சாப்பிடாததால் வந்த பாதிப்பும், அதிகம் சாப்பிட்டதால் வந்த பாதிப்பும் இரண்டு உயிர்களுக்கும் நேர்ந்த ஒரே விதமான பாதிப்பு தான். இந்த பாதிப்பில் எது பெரியது? எது சிறியது? என்று எதுவும் இல்லை. பாதிப்பு எந்தக் காரணத்தால் வந்தாலும், பாதிக்கப்பட்டவரை அதிலிருந்து வெளிக்கொணரும் சூழ்நிலையை உருவாக்காமல் அவர்கள் செய்த தவறுக்கு அவர்களே அனுபவிக்கட்டும் என்று நினைப்பது மனிதத் தன்மையல்ல. எனவே எந்த நோயால் பாதிப்பு வந்தது? அந்த நோய் எதனால் வந்தது? என்பதெல்லாம் முக்கியமல்ல. பாதிக்கப்பட்ட மனிதனை மீட்டெடுப்பது மட்டுமே முக்கியம். நமக்குள் இருக்கும் உயிர் எப்படி செயற்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டு செயற்பட்டால் உடலில் எந்த விதமான நோய் வந்திருந்தாலும் அதன் பாதிப்பைத் தாண்டி வாழ்வதற்கு வாய்ப்பிருக்கிறது.

எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் என்பது ஒரு நோயல்ல. நோயை எதிர்க்கும் சக்தியில்லாமல் போய் விடுவது. நோய் எதிர்ப்பு சக்தி, ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரே அளவில் இருப்பதில்லை. சிலருக்கு ஏதோ ஒன்றை சாப்பிட்டாலே நோய் வருகிறது. இன்னும் சிலருக்கு அவர்கள் எதைச் செய்தாலும் எதைச் சாப்பிட்டாலும். எதுவும் ஆவதில்லை. ஏனென்றால், நோய் எதிர்ப்பு சக்தியென்பது ஒவ்வொருவருக்கும் வேறுபடுகிறது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# மலேசியாவில் பயண இலக்கியம் ஒரு கண்ணோட்டம்

04

அவுஸ்திரேலியாவின் வரலாறு, இரண்டாவது உலகப்போரில் அதன் பங்கு, முன்னேற்றத்தை நோக்கிய முயற்சிகள்,இலங்கைத் தமிழர்களின் வாழ்வும் பணிகளும் பற்றியெல்லாம் இதில் எழுதியுள்ளார். இடையே தனது வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களையும் கட்டுரையினூடே எழுதியிருப்பது சிறப்பு!

சை.பீர். முகம்மதுவின் மண்ணும் மனிதர்களும் என்ற இந்தியப் பயணம் புற்றிய நூலை ஒரு நிறைவான பயண இலக்கியமாகக் கொள்ளலாம். 400 பக்கங்களில் 1998 இல் வெளியிட்ட இந்நூலின் முதல் பாகத்தில் தமிழகத்தைப் பற்றியும் எழுதியுள்ளார்.

"பயணக் கட்டுரைகள் அவ்வளவு சுலபமாக எழுதிவிட முடியாது. அனுபவங்கள் கலை நேர்த்தியுடன், அழகு உணர்வின் வெளிப்பாடுகளாக அமைய வேண்டும். இல்லாவிட்டால் அவை பிரயாண வழிகாட்டி நூலாகவோ தன் நிலை சுயபுராணமாகவோ ஆகிவிடக்கூடிய ஆபத்து உண்டு" என்று எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி சொல்லியிருப்பது முற்றிலும் உண்மை!

முதலாம் பாகத்தில் வடஇந்தியாவின் வரலாறு சிறப்பு என்று தனது பயணக்கட்டுரையில் கொடுத்துள்ளார். அதே போன்று இரண்டாம் பாகத்தில் தமிழ்நாட்டில் நடந்த புரட்சிகள், விடுதலைப் போர்கள் பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

மக்கள் ஓசை வார ஏட்டில் தொடராக வந்த இந்தப்பயணக்கட்டுரையில், அவர் வெறும் ஊர் சுற்றியதை எழுதவில்லை. மாறாக வாசகர்கள் அறிய பல தகவல்களைத் தந்துள்ளார். அதிலும் மருது பாண்டியர் பற்றியும் சிவகங்கைப் போர் பற்றியும் இளவரசன் துரைசாமி பற்றியும் அவர் தகவல்களைத் திரட்டித் தந்துள்ளார். அது தொடர்பான கும்மிப்பாட்டு வரிகளையும் இணைத்துள்ளார். படங்கள் இல்லாத குறையை இவரது எழுத்து முழுமையாக நிறைவு செய்துள்ளது!

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

### மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் பயணங்கள்

மலேசியத் தமிழ் எழுத்தாளர்களுக்கும் அவர்களின் படைப்புகளுக்கும் உரிய அங்கீகாரம் தமிழ் நாட்டில் கிடைப்பதில்லை என்ற குறை பலகாலமாக இருந்து வருகிறது. மலேசியத் தமிழ்ப் படைப்புகளை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சிக்கு முன்னுரிமை கொடுத்து இலக்கியப் பயணம் மேற்கொள்ளும் வண்ணம் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தலைவர் பெ.இராஜேந்திரன் 2004,2007 என இருமுறை எழுத்தாளர்களை அழைத்துச் சென்றார்.

முதல்ப்பயணம் 2004-ல் நடைப்பெற்றது. தமிழகம், புதுவைப்பயண நிகழ்ச்சிகளையும் எழுத்தாளர்களின் எண்ணக் குவியல்களையும் வேர்களை நோக்கி விழுதுகளின் பயணம் எனும் தலைப்பில் 96 பக்கங்களில் நிறையப் படங்களோடு பெ.இராஜேந்திரன் நூலாக 2007-ல் வெளியிட்டுள்ளார்.

கலைஞர் மு.கருணாநிதி மற்றும் கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோரின் ஆலோசனைகளை ஏற்றுப்பெரும் சிரமத்திற்கிடையில் இந்தப்பயணம் அமைந்தது.

இந்தப் பயணத்தின் போது ஆங்காங்கே நடைபெற்ற கருத்தரங்குகளின்போது, படைக்கப்பட்ட கட்டுரைகளின் விபரங்கள், அது தொடர்பாக எழுந்த அனுபவங்கள் என இலக்கியப்பயணம் தொடர்பாக எல்லாத் தகவல்களையும் தந்துள்ளார்.

2007 இல் நடைபெற்ற தமிழக, புதுவை இலக்கியப்பயணம் முந்தய பயணத்தை விட மாறுப்பட்டது! ஆம்! நெடுநாள் போராட்டத்திற்குப் பிறகு தமிழக அரசு, கருத்தரங்கு, தமிழகப் புதுவை இலக்கிய உலா போக்குவரத்து, தங்கும் வசதி என செலவுகளை ஏற்றுக்கொண்டது. அத்தோடு இந்த இலக்கியப் பயணம் எப்படி அமைய வேண்டும் என்பதையும் தமிழ்நாடு மொழி வளர்ச்சித் துறை வாயிலாகத் தமிழக அரசு நிழ்ச்சி நிரல் தயாரித்து வழங்கியது.

இந்தப் பயண விபரங்கள் அடங்கிய தொகுப்பான கரையை நோக்கி அலைகள் 2008-ல் வெளிவந்துள்ளது. மக்கள் ஓசை ஞாயிறு மலரில் தொடராக வெளிவந்து, பின்னர் நூலுருவும் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. 232 பக்கங்களில் வந்துள்ள இந்நூலில் தஞ்சைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம.இராஜேந்திரன், டத்தோஸ்ரீ ச.சாமிவேலு, டத்தோஸ்ரீ சி.சுப்பிரமணியம், கவிப்பேரரசு வைர முத்து ஆகியோரின் வாழ்த்துச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

ஆ.குணநாதன் -மலேசியா

(தொடரும்)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 17.12.2011–14.01.2012




**அவிட்டம், 3, 4 பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 பாதங்கள்**

**வளர்ச்சிப் பாதையில் அதிக கவனத்தைச் செலுத்தும் கும்ப இராசி நேயர் களே!**

எதிரிகளைக்கூட நட்பாக்கிக் கொள்ளும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. சுயமாக சிந்தித்து செயல்படும் மனப்போக்கு உடையவர்கள். தன்னைத்தானே விமர்சிக்கும் ஆற்றலும் உங்களுக்கு உண்டு. பந்தபாசங்களுக்கு கட்டுப்பட்டவர்கள் என்றாலும் சில நேரங்களில் எல்லை மீறிச் சென்று விடுவீர்கள். மற்றவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் நீங்கள் ஒரு சில சமயங்களில் இரகசியங்களை வெளியிட்டு அல்லலுக்கும் ஆளாக நேரிடும் கொள்கைப் பிடிப்பை மாற்றிக் கொள்ளாமல் இருந்தால் கூடிய விரைவில் முன்னேற்றங்களை காண இயலும்.

உங்களுக்கு இந்த மார்கழி மாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, நல்ல வாய்ப்புக்கள் நாடி வரப் போகின்றன என்றே சொல்ல வேண்டும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். அஷ்ட மத்துச்சனி விலகி விட்டது என்பதால் அமைதியும் ஆனந்தமும் வந்துசேரும். சச்சரவு கொடுத்தவர்கள் தானாக விலகுவர். பச்சைக் கொடி இனி பணிபுரியும் இடத்தில் பறக்கும். இச்சைகள் நிறைவேற இல்லம் தேடிவந்து எல்லோரும் உதவுவர். அச்சமில்லாத வாழ்க்கைக்கு அடித்தளமிடப் போகிறீர்கள்.

தனாதிபதி குருவும் வக்ர நிவர்த்தியானதால் பணப் புழக்கம் அதிகரிக்கும். உத்தியோக, ஊதிய உயர்வு கிடைக்கும். மனக்கசப்பு மாறி மகிழ்ச்சியான வாழ்க்கை உருவாகும்.

டிசம்பர் 17 ஆம் திகதி மகர இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பெற்றோர் வழியில் சச்சரவுகள் ஏற்பட்டு அகலும். தாய், தந்தையின் உடல் நிலையில் கவனம் தேவை, வீடு வாங்கும் அல்லது விற்கும் முயற்சியில் நற்பலன் கிடைக்கும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வள்ளல்களின் ஒத்துழைப்போடு வளர்ச்சிப் பாதைக்கு வழி கிடைக்கும்.

எல்லா இராசிகளுக்கும் சனி பெயர்ச்சியானதைக் காட்டிலும், உங்கள் இராசிக்கு பெயர்ச்சியான சனி நல்ல மாற்றத்தைக் கொடுக்கும். குறிப்பாக அஷ்டமத்துச்சனி விலகிய இந்த நேரத்தில் அடுக்கடுக்காக நல்ல செய்திகள் வந்து கொண்டே இருக்கும். உடல் நலம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரியத் தொடங்குவீர்கள். கடந்த காலத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்போது துரிதமாக நடைபெறும்.

புதனும் சுக்கிரனும் பெயர்ச்சியாகும் போது நல்ல மாற்றங்கள் உங்களைத் தேடிவரும். ஜனவரி முதல் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்க போகிறார். புதன் ஸ்தானா திபதி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பிள்ளைகள் வழியில் இலாபம் கிடைக்கும். சுக்கிர பெயர்ச்சியின் மூலமாக ஜனவரி 10 ஆம் திகதிக்கு மேல் பணப் புழக்கம் அதிகரிக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வார்கள். நீண்டதூர பயணங்கள் நிகழ்காலத் தேவைகளை பூர்த்தி செய்யும். அன்பு நண்பர்களின் ஆதரவோடு திருமண வாய்ப்புக்கள் வந்து சேரக்கூடிய நேரமிது. மாலை வாய்ப்புக்களும், மழலை வாய்ப்புக்களும் வந்து சேரக்கூடிய நேரம் இது. இம்மாதம் சனிபகவான் வழிபாட்டை சனிக்கிழமை தோறும் மேற்கொண்டு வந்தால் சிறப்பான வாழ்க்கை அமையும்.

இம்மாதம் இனிய மாதமாக உங்களுக்கு அமையும். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பணக்கவலை தீர்ந்தது என்று சொல்லி மகிழ்வீர்கள். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். தனம், பொருள் சேர்க்கை உண்டு. உங்கள் பெயரிலேயே வியாபாரம் தொடங்க குடும்ப உறுப்பினர்கள் ஒத்துக் கொள்ளலாம். மங்கல காரியங்களில் மனதைச் செலுத்தலாம். இராகு கேது பரிகாரம் செய்வதன் மூலம் தடைகள் அகலும். தன இலாபம் சேரும்.

## சிவல்புரி சிங்காரம்

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி , ரேவதி**

**உதவும் குணத்தால் உள்ளத்தில் இடம் பிடிக்கும் மீன இராசி நேயர் களே!**

பொதுநல ஈடுபாடு உங்களுக்கு அதிகமாகவே, இருக்கும். புகழ் ஏணியின் உச்சிக்கு நீங்கள் சென்றாலும் பார்ப்பதற்கு எளிமையாகவே இருப்பீர்கள். நீங்கள் இருக்கும் நிறுவனங்களுக்கு நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். ஏதோ வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது என்று எப்போதும் சொல்வீர்கள் அயராத உழைப்பிற்கு சொந்தக்காரர்கள் என்று கூடச் சொல்லலாம் ஆனால், அத்தனை உழைப்பும் பிறருக்கே போய்ச் சேரும்.

உங்களுக்கு இந்த மார்கழி மாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது சனியின் சப்த பார்வை விலகினாலும் அது அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கிறது. எனவே எந்தவொரு நிகழ்ச்சியாக இருந்தாலும் யோசித்தும் இறைவனைப் பூஜித்தும் செய்வதே நல்லது. எட்டாம் இடத்துச்சனி ஏற்றத்தையும் கொடுக்கும் மாற்றத்தையும் கொடுக்கும். ஏமாற்றத்தையும் கொடுக்கும். என்பதால் சனீஸ்வரனையும் சர்வேஸ்வரனையும் விடாது வழிபடுவது நல்லது. ஒரு சிக்கலுக்குத்தீர்வு கண்டால் மற்றொரு சிக்கல் புதிதாக முளைக்கும். ஆனால், கவலைப்படவேண்டியதில்லை. எல்லோருக்கும் வரும் அஷ்டமத்துச் சனியைவிட உங்களுக்கு வரும் அஷ்டமத்துச் சனி ஓரளவு நன்மையைக் கொடுக்கும் சனிதான். 12 இற்கு அதிபதியான சனி 8 இல் அடியெடுத்து வைக்கும்போது விபரீத இராஜயோகத்தை செய்ய வேண்டுமல்லவா? எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். திறமை மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து உதவிக்கரம் நீட்டுவர். பெட்டிபடுக்கையோடு இடமாற்றம் வந்தாலும் சுய ஜாதகத்தில் ஒரு முறை பார்த்த பிறகு ஏற்றுக்கொள்ளுங்கள். சிலருக்கு வந்தமாற்றம் ஓரிரு மாதங்களிலேயே திரும்பியும் செல்லலாம்.

சனி கவசம் பாடி சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்ளுங்கள் எள் தீபம் ஏற்றி இனிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள். அர்ச்சனைகள் செய்தால் உங்கள் தொல்லைகள் தீரும் வண்ண மாலை அணிவித்தால் உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். அந்த சனிப்பெயர்ச்சி டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி வருகிறது.

சனிப்பெயர்ச்சிக்கு முன் னதாக டிசம்பர் 17 ஆம்திகதி மகர இராசிக்குச் சுக்கிரன் பெயர்ச்சியாகிறார். எனவே உடன் பிறப்புக்கள் உங்கள் இல்லம் தேடி வருவர். அவர்களை அனுசரித்துச் சென்றால் ஆதாயம் கிடைக்கும் வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படலாம். வளர்ச்சிப்பாதையில் நுழைந்த சில புதியவர்களின் தலையீட்டைக் குறைத்துக் கொள்வதுதான் நல்லது. ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். நண்பர்களிடம் ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வரலாம்.




ஜனவரி முதலாம் திகதியில் தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக தொழில் வளர்ச்சி மேலோங்கும். இருப்பினும் பணியாளர் பிரச்சினைகள் அதிகரிக்கும். பழைய தொழிலில் ஒன்றை மாற்றி புதிய தொழில் தொடங்க முன்வருவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு இலாகா மாற்றங்கள் உருவாகும்.

ஜனவரி 10 ஆம்திகதி கும்ப இராசிக்கு சுக்கிரன் செல்லப் போகிறார். இதன் விளைவாக வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வாங்கல், கொடுக்கல்கள் ஒழுங்காகும். கொடிகட்டிப் பறந்த குடும்பச் சச்சரவுகள் நல்ல முடிவுக்கு வரும். கல்யாண வாய்ப்புக்கள் மற்றும் கட்டிடப்பணி வாய்ப்புக்களை உபயோகப்படுத்திக் கொள்வது நல்லது. ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்துங்கள். இம்மாதம் சனீஸ்வர வழிபாடு சஞ்சலம் தீர்க்கும்.

அஷ்டமத்துச் சனி தொடங்கப் போவதால், அதிக கவனம் செலுத்த வேண்டிய மாதம் இது. குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் சென்றால் ஒற்றுமை பலப்படும். விலையுயர்ந்த பொருட்களை கையாளுவதில் கவனம் தேவை. வீடுமாற்றங்கள் உருவாகலாம். சர்வேஸ்வரன் வழிபாடும் சனீஸ்வரன் வழிபாடும் வாய்ப்புக்களை வரவழைத்துக் கொடுக்கும்.

(முற்றும்)

# சிறுபான்மை இனத்தவர்கள் தலைமைத்துவத்திற்கு வரமுடியாத நிலைமை வருத்தமளிக்கின்றது

## உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.தெரிவிப்பு

நூறுக்கு ஒரு சதவீதம் மட்டுமாக இருக்கின்ற சீக்கியர் ஒருவர் இந்தியாவில் பிரதமராக பதவி வகிக்க முடிந்த போதும் சிறுபான்மை இனத்தவர் ஒருவர் இலங்கையின் தலைமைத்துவத்திற்கு வரமுடியாதிருப்பது கவலைக்குரிய விடயமாகும் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்தார்.

கண்டி மடவளை வை.எம்.எம்.ஏ இயக்கத்தினர் மடவளை மதீனா தேசிய பாடசாலையில் ஒழுங்கு செய்த கூட்டம் ஒன்றில்,

மடவளை வை.எம்.எம்.ஏ இயக்கத்தினர் நடத்தும் பாலர் பாடசாலைகளில் வருடாந்த கலைவிழா நேற்று முன்தினம் மாலை மடவளை மதீனா தேசிய பாடசாலையின் அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அங்கு மேலும் உரையாற்றிய அமைச்சர் எஸ்.பி திஸாநாய்க்க,

நாங்கள் எமது நாட்டை இன மத பேதமற்ற நாடாக மாற்ற வேண்டும். ஆசியாவில் மிகவும் கூடிய கல்வி தரத்தை கொண்ட ஒரு நாடாக முடிந்த எமக்கு இது கடினமான விடயம் அல்ல.

இந்தியாவில் 274 மதங்கள் இருக்கின்றன. பிரதான மதங்கள் 72 இருக்கின்றன. இன்றும் இந்தியாவில் ஆட்சி புரியும் கட்சியின் தலைவியாக இருப்பவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவா. இந்தியாவின் பிரதமர் நாட்டின் ஒரு சதவீதம் மட்டும் இருக்கின்ற சீக்கிய இனத்தவர் ஒருவர். ஆனால் இது எதுவும் இந்திய மக்களுக்கு பிரச்சினை அல்ல.

ஆனாலும் இலங்கையில் சிங்களவர் அல்லாத ஒருவருக்கு தலைமைத்துவத்திற்கு வர முடியுமா என்று கேட்டால், அது இயலாதது என்று தான் பதில் கூற வேண்டும். இது கவலைக்குரிய விடயமாகும்.

நாங்கள் பல்கலைக்கழகங்களை ஒரு போதும் இன மத அடிப்படையில் பிரிக்க மாட்டோம். ஆனாலும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நூற்றுக்கு 90 சதவீதமான மாணவர்கள் முஸ்லிம்களாவர். மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் மூன்றில் ஒரு பங்கு முஸ்லிம் மாணவர்கள் நாட்டின் ஏனைய பல்கலைக்கழகங்களில் சன விகிதாசாரத்திற்கும் சிறிதளவு அதிகமான முஸ்லிம் மாணவர்கள் இருக்கின்றார்கள்.

இன்று கூடுதலான அபிவிருத்தி நடப்பது வட கிழக்கு மாகாணங்களுக்கே நாட்டின் அபிவிருத்தி வேகம் எட்டு சதவீதம். வட கிழக்கில் அபிவிருத்தி வேகம் 24 சதவீதம். நாங்கள் வரலாற்றில் தவறிழைத்து விட்டோம். அந்த தவறை மீண்டும் செய்ய கூடாது எனவும் கூறினார். (அ-2)

## இருவர் வெட்டி படுகொலை

அனுராதபுரம் நொச்சியாகம நாவன்குளம் பகுதியில் இரண்டு பேர் கூரிய ஆயுதங்களினால் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர். நாவன்குளம்-அழுத்வெல பகுதியில் உள்ள வயல் ஒன்றில் இருந்து இந்த சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இரண்டு உறவு முறை சகோதரர்களே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் வீடு திரும்பாததால் உறவினர்கள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்திருந்தனர். இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் அவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

24 மற்றும் 18 வயதான இந்த இளைஞர்கள், காலவென மற்றும் திவுல்வென பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். இந்த கொலை சம்பவம் குறித்து நொச்சியாகம பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திக்கு 22,231 மில்லியன் அமெரிக்க டொலர்கள்

கிளிநொச்சி இரணைமடு பிரதேசத்தில் உள்ள நீர்ப்பாசன அபிவிருத்தித்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திடமிருந்து 22 ஆயிரத்து 231 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு அமைச்சர் என்ற வகையில் தினேஷ் குணவர்த்தன முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு ஏற்ப இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் 8 ஆயிரத்து 455 ஹெக்டர் நிலப்பரப்பிற்கு நீர் வழங்கும் வடிகாலமைப்பு இத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது.

இதேவேளை 317 மில்லியன் ரூபா செலவில் காலி மாவட்டத்தில் உள்ள திக்கும்புர நீர் விநியோகத் திட்டத்தை அமைப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இக்கருத்திட்டத்தின் மூலம் திக்கும்புர பிரதேச மக்களுக்கான 27 கிலோ மீற்றர் தூரத்திற்கு நீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. (அ-2)

# நல்லிணக்க ஆணைக்குழு மக்களின் பிரச்சினைகளை சீராக ஆராய்ந்துள்ளது

## கர்தினால் ரஞ்சித் ஆண்டகை



ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளரது இலங்கை தொடர்பிலான அறிக்கையை விட ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, பொதுமக்கள் பிரச்சினை குறித்து சீராக ஆராய்ந்துள்ளதாக கர்தினால் மெல்கம் ரஞ்சித் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கிறிஸ்மஸ் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். யுத்தச் சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து இந்த அறிக்கை சிறப்பாக ஆராய்ந்துள்ளது. இந்த முயற்சி இலங்கையின் சொந்த முயற்சி என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும் இது மாத்திரமே தீர்வு என எதிர்பார்த்திருக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் அனைத்து பிரச்சினைகளையும் சர்வதேச சமூகத்திடம் முறையிடும் போது சமாதான முயற்சிகளை அது சீர்குலைக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கரைச்சி பிரதேசத்தில் 300 பேருக்கு வீடுகள் அமைக்கும் பணி துரிதம்

கரைச்சி பிரதேசத்தில் சொந்த இடங்களில் மீள்குடியேறிய மக்களுக்கு இருப்பிடவசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க முன்வந்துள்ள என் கபிற் நிறுவனம் 300 வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டதை தொடர்ந்து வீடுகள் அமைக்கும் வேலை துரிதமாக இடம்பெற்று வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேசத்தில் அக்கராயன் குளம், ஆனைவிழுந்தான் குளம் ஆகிய இடங்களில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் அவசர அவசரமாக தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீடுகளில் பல சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ள மேற்படி நிறுவனம், இத் திட்டத்தின் கீழ் 300 பயனாளிகளைத் தெரிவு செய்துள்ளது.

ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் அமைப்பதற்கான வேலைகள் தற்பொழுது துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்க நிறுவனத்தினால் 600 வீடுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

இந்த வீடுகளில் 300 வீடுகள் ஏற்கனவே கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

ஏனைய 300 வீடுகளும் அமைக்கும் வேலை துரிதமாக இடம்பெற்று வருவதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# அரச கம்பனி ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

அரசின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள கம்பனிகளின் ஊழியர்களுக்கு 2011 ஆம் ஆண்டுக்கான மேலதிக கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்புப் பணம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிதி மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த ஆலோசனைக்கு ஏற்ப இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இவ்வருடம் இலாபமீட்டிய நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வருட போனஸ் பணமாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

எனிலும் வரவு மற்றும் செயற்திறன் அடிப்படையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கும் நிறுவனங்களிலுள்ள ஊழியர்களுக்கு ஊக்குவிப்புப் பணமாக 7 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படவுள்ளது.

இதேவேளை நட்டத்தில் இயங்கும் நிறுவன ஊழியர்களுக்கு 1000 ரூபா ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட உள்ளதுடன் நட்டத்தில் இயங்கிய போதும் கடந்த வருடத்தை விட நட்டம் குறைவடைந்த நிறுவன ஊழியர்களுக்கு 2 ஆயிரம் ரூபா போனஸ் தொகை வழங்கப்படவுள்ளது. (அ-2)

# கொழும்பின் பாரிய அபிவிருத்திக்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு மாநகரசபை மத்தியஸ்தலமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேலும் விஸ்தரிக்கும் வகையில் முன்வைக்கப்பட்ட திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

அதன்படி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இனம் காணப்பட்டுள்ள பல்வேறு கருத்திட்டங்கள் கட்டம் கட்டமாக செயற்படுத்தபடவுள்ளன.

கொழும்பு மனிங் சந்தை ம்ற்றும் மொத்த வியாபார தலங்கள் பேலியகொடைக்கு மாற்றம்,

கொழும்பு மத்திய பஸ் நிலையத்தை மனிங் சந்தை கட்டடத் தொகுதியை உள்ளடக்கிய வகையில் விஸ்தரித்தல், நடைபாதை வர்த்தகர்களுக்கான விசேட வர்த்தகத் தொகுதி ஒன்றும் அத்துடன் அமைக்கப்படல்,

புறக்கோட்டை பழைய மீன் சந்தையை உள்ளடக்கிய மத்திய சந்தை புனரமைப்பு, புளும்பீலட் விளையாட்டுத் திடல் மற்றும் கொழும்பு கோட்டை வர்த்தக விற்பனைத் திணைக்கள கட்டடத்தை நவீனமயமாக்கல், புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்துக்கு அண்மித்த பகுதி வர்த்தகர்களுக்கு புறம்பான பிரதேசம் ஒன்றை அமைத்தல்,

சுதந்திர சதுக்கத்துக்கு அண்மித்த பகுதிகளை அபிவிருத்தி செய்தல், முதலான திட்டங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபை ஊடாக மேற்கொள்ளப்பட உள்ளன. (அ-2)

# கிளர்ச்சியாளர்களால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை

## ஐ.தே.க.தெரிவிப்பு

கிளர்ச்சியாளர்களினால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவிற்கான நியமனங்கள் மிகவும் நேர்மையான முறையில் மேற்கொள்ளப்பட்டதாக கட்சித் தலைமை அறிவித்துள்ளது.

கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைவான முறையில் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, செயற்குழு உறுப்பினர்கள் நியமனத்தில் எவ்வித குளறுபடிகளும் கிடையாது என கட்சித் தலைமைத்துவம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை கட்சித்தலைமைப் பதவிக்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்ட 19ஆம் திகதி சிலர் கட்சியின் செயற்குழுவிற்காக நியமிக்கப்பட்டதாக கிளர்ச்சியாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நியாயமான முறையில் செயற்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை என கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட தயாராகவுள்ளேன்

## கொழும்பு மேயர் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட தயாராகவுள்ளதாக கொழும்பு மாநகர மேயர் ஏ.ஜே.எம் முஸம்மில் தெரிவித்துள்ளார். கொழும்பு மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தை நேற்று முன்தினம் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வரவு செலவுத்திட்டத்தில் கொழும்பு மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டிற்கான செலவினம் 7ஆயிரத்து 750.8 மில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

7ஆயிரத்து 751.3 மில்லியன் ரூபா வருமானம் அடுத்த வருடத்தில் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு செலவுத்திட்டம் மீதான விவாதம் இன்றும் நடைபெறவுள்ளதுடன் இன்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

அரசாங்கம் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய எண்ணியுள்ளதாக இதன் போது தெரிவித்த மேயர் கொழும்பு நகரின் அபிவிருத்தியும் அழகுபடுத்தும் நடவடிக்கையும் அதனுடன் நேரடியாகத் தொடர்புபடுவதாகக் கூறினார்.

இலங்கை தொடர்பில் கொள்கை ரீதியான மேம்பாட்டை கொழும்பு நகரில் உருவாக்க முடியும் எனவும் கொழும்பை சிறந்த நகராகவும் அதிசயம் மிக்க நகராகவும் மாற்றுவதனையும் உறுதி செய்வதே அனைவரும் எதிர்நோக்கும் சவாலாக உள்ளது எனவும் முஸம்மில் குறிப்பிட்டார்.

இதேவேளை, கொழும்பு மாநகர சபையின் வரவு செலவுத்திட்ட மதிப்பீடு தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாநகர எதிர்க்கட்சித் தலைவர் மிலிந்த மொறகொட எதிர்க்கட்சி என்ற வகையில் சிறந்த விடயங்களைப் பாராட்டுவதுடன் தவறான விடயங்களை சுட்டிக் காட்டுவதாகவும் தெரிவித்தார். (அ-2)

# கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 22 பேர் விடுதலை

(கச்சதீவு)

கச்சதீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட காரணத்தினால் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 22 தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடலில் பலத்த காற்று வீசியதால் இவர்களது படகு இலங்கை நெடுந்தீவு மற்றும் கோபுரத்தீவு பகுதியில் கரையொதுங்கியதாக இந்திய மீனவர்கள் தெரிவித்தனர்.

மீனவர்களை கைது செய்த இலங்கை கடற்படையினர் விசாரணைக்குப்பின் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

மீனவர்களை விடுதலை செய்ய நீதிபதி உத்தரவிட்டதை தொடர்ந்து அவர்களை தமிழகத்திற்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இவ்வாண்டு டெங்கு நோயின் தாக்கம் குறைவடைந்துள்ளது

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 24 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

இந்த ஆண்டின் 50 ஆவது வாரத்தில் வெளியான அறிக்கையின் ஊடாக அது புலப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த அறிக்கையின் பிரகாரம் கொழும்பு நகரில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அமைச்சு குறிப்பிடுகின்றது.

நுளம்பு பெருகும் இடங்களின் அதிகரிப்பு, குப்பைகள் கொட்டப்படுதல், சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளை உரிய முறையில் பின்பற்றாமை ஆகிய காரணிகளே கொழும்பில் டெங்கு அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளதாக அமைச்சு தெரிவிக்கின்றது. (அ-2)

# சப்ரகமுவ மாகாணத்தில் செங்கண்மாரி நோய்

சப்ரகமுவ மாகாணத்தின் ருவன்வெல, வரக்காப்பொல மற்றும் லெவன்கம பகுதிகளிலிருந்து செங்கண்மாரி நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் அறியக் கிடைத்துள்ளது.

இந்நோயினால் பீடிக்கப்பட்ட 8 பேர் இதுவரை கரவனெல்லை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுதிக்கப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண சுகாதார அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்நோய்த் தொற்றிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள கொதித்தாறிய நீரைப் பருகும்படி அவர் பொதுமக்களுக்கு ஆலோசனை கூறுகின்றார்.

சப்ரகமுவ மாகாணத்தில் இந்நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாகாண முதலமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# சத்தியப்பிரமாண ஆணையாளர் குறித்து பட்டியல் தயாரிக்க நீதியமைச்சு திட்டம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சத்தியப்பிரமாண ஆணையாளர்கள் தொடர்பான பட்டியல்ஒன்றை தயாரிக்க திட்டமிட்டுள்ளது.

நாட்டிலுள்ள சத்திப்பிரமாண ஆணையாளர் தொடர்பில் முறையான பட்டிலொன்று இதுவரை தயாரிக்கப்படவில்லை என நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.கே.டி. அந்தர குறிப்பிட்டுள்ளார். சத்தியப்பிரமாண ஆணையாளர்களில் எத்தனைபேர் உயிருடன் இருக்கின்றனர் என்பது குறித்து ஆராய்வதற்கான தரவுகள் போதியளவு காணப்படவில்லை என்றும் நீதி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதன் காரணமாக நாட்டிலுள்ள சத்தியப்பிரமாண ஆணையாளர் பற்றிய தரவுகளை சேகரிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய சத்தியப்பிரமாண ஆணையாளர் தத்தமது தரவுகளை நீதியமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறும் அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. (அ-2)

## அதிவேக நெடுஞ்சாலையில்

# இதுவரை 32 விபத்துக்கள்; 300 பேருக்கு வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

தெற்கு அதிவேக மார்க்கம் திறக்கப்பட்ட நாள் முதல் இதுவரை 32 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 300 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அதிவேகம் மற்றும் கவனமின்றி வாகனம் செலுத்துதல் ஆகிய விடயங்கள் தொடர்பாகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அதிவேக மார்க்க பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அதிவேக மார்க்கத்தில் இடப்புறமாகவே வாகனத்தை செலுத்த வேண்டும் எனவும் மற்றுமொரு வாகனத்தை முந்திச் செல்லும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே வலப் பக்கத்தில் வாகனத்தை செலுத்த வேண்டுமெனவும் சாரதிகளிடம் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதிவேக மார்க்கத்தில் பண்டிகை காலத்தில் மது போதை மற்றும் அதிகவேகத்தில் வாகனம் செலுத்துகின்ற சாரதிகளுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் எச்சரித்துள்ளனர். அதிவேக மார்க்கத்தினூடாக நாளொன்றுக்கு ஆறாயிரம் வாகனங்கள் பயணிக்கின்றமை குறிப்பிடத் தக்கது. (அ-2)

# புளியங்குளத்தில் குண்டு வெடிப்பு

## ஆறு பேர் காயம்

புளியங்குளம் மணியமேடு பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் வவுனியா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த பகுதியிலுள்ள சின்னபரந்தன் ஆற்றிற்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட குண்டொன்றை சோதனையிட்ட சந்தர்ப்பத்தில் அது வெடித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

க.பொ.த (உ/த)-2010 பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய எமது மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



தி.பிரபாஜினி 2A,B | உ.சிந்துஜா A,2B | மு.ஜெசிகா A,2 B | த.பகீரதி A,B,C | சு.ஜெயக்குமார் A,B,C



வி.பிரபாகினி 3B | சி.கௌசலா 3B | ச.ஜெனிதா 3B | அ.மைக்கல் 3B | ஐ.துஸ்யந்தினி 2B,C

இ.பிரியதர்சினி 3A | எஸ்.விஜிதா 3B

பாடசாலைச் சமூகம்
கிளி/பூநகரி மகா வித்தியாலயம்.

(சி-5276)

சரியாகத் திட்டமிட்டால் முதல் முயற்சியிலேயே பாதித் தூரத்தை நிச்சயம் அடைந்து விடலாம்.

- என்.ஹில்

வலம்்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# உயர்தர வணிகப்பிரிவு பாடத்திட்டத்தில் திருத்தம் கொண்டுவர கல்வி அமைச்சு முடிவு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தர வணிகப் பிரிவிற்கான பாடங்களில் திருத்தம் மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கமைய வணிகப் பிரிவிலுள்ள கணக்கியல், பொருளியல், வர்த்தகம் ஆகிய பாடங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

குறித்த பாடங்களுக்குரிய பாடவிதானங்கள் அதிகரித்துக் காணப்படுவதால் அதனை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாணவர்களும் பெற்றோரும் பொதுமக்களும் விடுத்த வேண்டுகோளை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி நிறுவனத்தின் தலைமையில் திருத்தியமைக்கப்பட்ட பாடவிதானங்கள் 2012 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு பின்னர் புதிய பாடவிதானத்திற்கு அமைய பரீட்சையில் தோற்றும் அனைத்து மாணவர்களுக்காகவும் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் கல்வி அமைச்சின் கையொப்பத்துடன் மாகாண கல்விச் செயலாளர், பணிப்பாளர், அனைத்து வலயக் கல்வி பணிப்பாளர்கள் மற்றும் அனைத்து பாடசாலைகளினதும் அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கும் இந்த அறிவித்தலின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# நாகரிகத்தின் தொடக்கம் எதிலிருந்து ஆரம்பமாகின்றது?

ஓர் ஆசிரியர் மாணவர்களுக்கு பல விடயங்களையும் எடுத்துக்கூற வேண்டும். இந்த நினைப்பில் வகுப்பறைக்குச் சென்ற நாம் மாணவர்களே நாகரிகத்தின் ஆரம்பம் எதுவென நினைக்கிறீர்கள் என்று ஒரு கேள்வியைக் கேட்டோம்.

அதற்கு மாணவர்கள் ஆடை அணிவதில் இருந்துதான் நாகரிகம் தோற்றம் பெற்றது என்றார்கள்.

மாணவர்களின் பதில் நியாயமானதாகத் தெரிந்தாலும், தொலைக்காட்சிகளில் கூட சிலர் முக்கால் நிர்வாணமாகக் காட்சி தருகிறார்கள். அப்படியானால் எப்படி ஆடை அணிவதில் இருந்து நாகரிகம் ஆரம்பமாகிறது என எனக்குள் சிந்தித்துக் கொண்டேன்.

மாணவர்களே நீங்கள் கூறுவதும் சரிதான். ஆனால் என்னைப் பொறுத்தவரை இந்த உலகில் எப்போது மலகூடப்பாவனை அறிமுகமாகியதோ அன்றுதான் நாகரிகத்தின் ஆரம்பமும் ஏற்பட்டது என்றேன்.

இவ்வாறு நான் கூறி முடிந்ததும் மாணவர்கள் அப்படியா சேர் என்றார்கள்.

ஒரு மாணவன் திடீரென்று எழுந்து, சேர்! முறிகண்டியில் ஏன்தான் மலகூடப் பாவனைக்கு காசு வேண்டுகிறார்கள் என்றான்.

இன்னொரு மாணவனோ, காசை வேண்டுவதை நியாயப்படுத்தினாலும் அந்த மலகூடத்தை சுத்தப்படுத்துவதாக இல்லை.

இந்த நாட்டின் பல பாகங்களில் இருந்து வருகின்ற மக்கள் முறிகண்டி மலசலகூடத்தைப் பார்த்து எங்கள் நாகரிகத்தை மட்டுப்படுத்த மாட்டார்களா என்று கேட்டான். உண்மைதான் என்று தலையாட்டினேன்.

சேர்! நாகரிகத்தின் ஆரம்பப்புள்ளி மலகூடப் பாவனையில் இருந்து தொடங்குவதாகக் கூறுகிறீர்கள். அப்படியானால் எங்கள் பிரதேசத்தில் நாகரிகம் இன்னமும் ஆரம்பிக்கவில்லையா? என்று இன்னொரு மாணவன் கேட்டான். எனக்கு தலை சுற்றிக் கொண்டது.

ஏன் அப்படிக் கூறுகிறீர்கள் என்று கேட்டேன். எனது கேள்விக்கு தான் ஒரு உயர்தர வகுப்பு மாணவன் என்ற மிடுக்கோடு அவன் பதிலளித்தான்.

சேர்! திருநெல்வேலி சந்தைப் பகுதியில் மாபிள் பதித்த அழகான மலசலகூடம். சந்தைப் பகுதியில் அது அவசியமானதுமாகும்.

ஆனால் இந்த மலசலகூடத்தைப் பாவிக்க இரண்டு ரூபாய் அறவிடுகிறார்கள்.

சந்தைக்கு வருகின்ற விவசாயிகள், வியாபாரிகள் இரண்டு ரூபாய் கொடுத்து மலசலகூடத்தை பாவிப்பதே இல்லை.

அதற்காக அவர்கள் அந்த கடமையை அப்பகுதியில் செய்யாமலும் இல்லை.

எப்படி எங்கள் நாகரிகம் இருக்கிறது? யாழ்ப்பாணத்தில் திடீரென ஒரே நாளில் எல்லாத் திணைக்களங்களிலும் மலசலகூடப் பாவனை எப்படி இருக்கிறது என பரிசோதனை நடத்தினால் எங்கள் நாகரிகத்தின் ஆரம்பம் எப்படி என்பதை உணரமுடியும் என்று அந்த மாணவன் கூறிய போது, உண்மைதான். நாங்கள் இன்னமும் மனப்பாங்கில் வளர்ச்சி அடையாதவர்களாகவே இருக்கிறோம்.

எங்களிடம் மற்றவர்கள் பற்றி சிந்திக்கும் எண்ணம் சிறிதளவேனும் இருந்தால் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் உள்ள மலசலகூடங்களை தூய்மையாகப் பயன்படுத்துவோம் அல்லவா?

இந்த நினைப்பு எங்கள் தொடர்பில் வெறுப்பை ஏற்படுத்த அந்த வகுப்பில் இருந்து வெளியேறினேன்.

நாகரிகத்தின் ஆரம்பமே எங்களிடம் சரிவர எடுத்துச் செல்லப்படவில்லை. பின்பு தொற்று நோயைத் தடுப்பது எப்படி?


## ஜே.வி.பியின் விசேட சம்மேளனம் ஜனவரி முதலாம் திகதி

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) விசேட சம்மேளனம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி திஸ்ஸமஹாராமவில் நடைபெறவுள்ளது.

ஜே.வி.பி.யாப்பின் படி 5 வருடங்களுக்கு ஒரு தடவை இச்சம்மேளனக் கூட்டம் நடைபெறவேண்டும். எனினும் அவசர சூழ்நிலைகளின் போது விசேட சம்மேளனத்தைக் கூட்டுவதற்கு கட்சியின் பொதுக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் விவகாரம் தொடர்பாக இச்சம்மேளனத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என எதிர்ப்பார்க்கப்பட்டுகிறது. (2)

# விண்வெளியில் இருந்து விழுந்த இரும்பு குண்டு



(வின்ட்கோயக்)

ஆபிரிக்க நாடான நமீபியாவில் விண்வெளியில் இருந்து இரும்புக்குண்டு ஒன்று விழுந்தது. தலைநகர் வின்ட்கோயக்கில் இருந்து 750 கி.மீற்றர் தூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் விழுந்த அந்த இரும்புக் குண்டு 1.1 மீற்றர். அதாவது 43 இஞ்ச் நீளமும் 35 செ.மீற்றர் அகலமும் கொண்டது.

இந்த குண்டின் எடை 6 கிலோ இருந்தது. இரு அரை வட்டங்கள் வெல்டிங்க் செய்து ஒட்ட வைக்கப்பட்டிருந்தது. அந்த குண்டு விழுந்ததால் பூமியில் 3.8 மீற்றர் அகலத்தில் 33 செ.மீற்றர் ஆழம் ஏற்பட்டது. இந்த குண்டு எங்கிருந்து எப்படி விழுந்தது என தெரியவில்லை. எனவே இது குறித்து நாசா மற்றும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குண்டு கடந்த நவம்பர் மாதம் மத்தியில் விண்ணில் இருந்து விழுந்தது. இரும்பினால் ஆன இந்த குண்டினால் ஆபத்து எதுவும் ஏற்படவில்லை. வெடிக்கக்கூடிய தன்மையற்றதாக அது இருந்ததாக விசாரணை நடத்திய பொலிஸ் அதிகாரி வில்கோ தெரிவித்தார்.

தென் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு இது போன்று விண்வெளியில் இருந்து குண்டுகள் விழுந்துள்ளன. (அ-2)

# விஷப்பூச்சிகளின் அச்சத்துடன் வாழும் மீள்குடியேறிய சன்னார் மக்கள்

(கொழும்பு)

வன்னி யுத்தத்தின் பின் மீள் குடியமர்வு செய்யப்பட்ட மன்னார் மாவட்ட மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சன்னார் கிராம மக்கள் தற்போது விஷப்பாம்புகளின் அச்சுறுத்தலுடன் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் சன்னார் கிராம மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், யுத்தத்தின் பின் மீண்டும் சன்னார் கிராமத்தில் நாங்கள் மீள் குடியமர்வு செய்யப்பட்டோம். தற்போது 145குடும்பங்களைச் சேர்ந்த 850பேர் இந்தக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றோம். எமது வீடுகளைச் சுற்றி அடர்ந்த காடுகள் காணப்படுகின்றன.

தற்போது மழை பெய்து வருகின்றது. இதனால் காடுகளுக்குள் உள்ள பாம்புகளும் விஷப்பூச்சிகளும் எமது குடிசைகளை நோக்கிப் படை எடுக்கத் தொடங்கியுள்ளன. எமது வீடுகள் ஓலைக் குடிசைகளாகவே காணப்படுகின்றன.

எமது கிராமத்தில் அதிக சிறுவர்கள் வசிக்கிறார்கள். அண்மையில் படுத்த படுக்கையில் வைத்து விஷப்பாம்பு தீண்டி 14வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் தொடரும் என்ற அச்சத்தில் நாங்கள் வாழ்ந்து வருகின்றோம்.

இரவு நேரத்தில் நித்திரை கொள்ள முடியாத நிலையில் உள்ளோம். இரவாகியவுடன் அச்சத்தில் வீட்டை விட்டு வெளியில் செல்ல முடியவில்லை. நாம் தொடர்ந்தும் முடக்கி வைக்கப்பட்ட அகதிகளாக வாழ்ந்து வருகின்றோம்.

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர், சன்னார்கிராம அலுவலர் ஆகியோர் மனம் வைத்தால் எமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் என அவர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

## மழையுடன் கூடிய காலநிலை தொடரும்

நாட்டை அண்மித்த கடற்கரை பகுதிகளில் நிலவும் காலநிலை மாற்றத்தால் நாட்டின் கடற்கரை மற்றும் ஏனைய பகுதிகளில் பாதிப்புக்கள் ஏற்படக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. இதனால் வடக்கு, வட மத்திய, கிழக்கு, ஊவா, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை அதிகரிக்கும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்யக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. விட்டு விட்டு புயல் காற்றும் வீசும் என்பதால் மீனவர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## அன்புதான் வாழ்க்கை



உன் உடலில் விழுந்த ஒரு துளி மையைப் பற்றி கவலைப்படாதே! இறைவன் என்னும் கருணைக் கடலில் மூழ்கி எழுந்திரு. இதுபோன்ற ஆயிரம் துளிகள் இருப்பினும் அவை இருந்த இடம் தெரியாமல் போகும்.

நமக்கு நாமே நன்மை செய்து மோட்சத்தை அடைவதைவிட மற்றவர்களுக்கு நன்மை செய்து ஆயிரம் நரகங்களுக்கு செல்ல தயாராக இருக்க வேண்டும்.

அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றை தவிர வேறொன் றும் நமக்கு தேவையில்லை. அன்பு தான் வாழ்க்கை.

சமயம் என்ற பெரிய கறவை மாடு பல முறை உதைத்திருக்கலாம். ஆனால் அதை நாம் பொருட்படுத்த வேண்டாம். காரணம் கறவை மாடு அதிகம் பால் தருகிறது. இதனால் பசுவின் உதையைப் பால்காரன் பொருட்படுத்தமாட்டான்.

துணிந்து செயல்படுங்கள். எதையும் முடிக்க வேண்டும் என்ற முடிவுடன் செயல்பாட்டில் இறங்குங்கள்.

முடியாது என்ற வார்த்தையை அகராதியை விட்டு அகற்றுங்கள்.

# பிரேசிலில் இரட்டை தலையுடன் அதிசய ஆண் குழந்தை பிறப்பு



பெண் ஒருவருக்கு இரட்டை ஆண் குழந்தை பிறந்துள்ளன. ஆனால், அவர்களின் முழு உடலும் இணைந்து உள்ளன.

தலைகள் மட்டும் தனித்தனியாக உள்ளது. இந்த அதிசய சம்பவம் நேற்று முன்தினம் நிகழ்ந்துள்ளது.

இக்குழந்தைகள் இரட்டைத் தலைகளைக் கொண்டு ஒரு குழந்தை போன்ற தோற்றத்தைக் கொண்டிருக்கிறது.

இரண்டு தலைகளும் சரியாகவும் ஒரே மாதிரியாகவும் உள்ளதாக மருத்துவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். அத்துடன் இரு குழந்தைகளும் ஆரோக்கியமாக உள்ளனர்.

பிரேசில் நாட்டிலுள்ள மருத்துவமனை ஒன்றில் சிசேரியன் அறுவைச்சிகிச்சை மூலமே இரட்டைத் தலையைக் கொண்ட இரு குழந்தைகளும் பிறந்துள்ளனர்.

இந்தக் குழந்தைகளுக்கு இரு மூளைகளும் இரண்டு முள்ளந்தண்டு எலும்புகளும் ஒரே ஒரு இதயமும் உள்ளன. இரண்டு வாய்கள் மூலமும் உணவு வழங்கப்படுகின்றது.

இரண்டு வயிறு உள்ளதா என்பதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தவில்லை.

குழந்தைகளின் உடல் சாதாரண குழந்தைகளின் உடல் தோற்றத்தைப் போலவே இருக்கின்றது. இரு தலைகளில் ஒன்றை அறுவைச் சிகிச்சை மூலம் நீக்குவது பற்றி ஆலோசிக்கப்படுகின்றது. (அ-2)

# பொருளாதார உறவை மேம்படுத்த ஜப்பான் பிரதமர் இந்தியா விஜயம்

இருநாடுகளிடையே பொருளாதார உறவை மேம்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஜப்பான் பிரதமர் அடுத்த வாரம் இந்தியா வரவுள்ளார்.

இது குறித்து வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அடுத்த வாரம் வரவுள்ள ஜப்பான் பிரதமர் நோடா பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து பேசவுள்ளார்.

பேச்சுவார்த்தையின் போது அணுசக்தி துறையில் இணைந்து செயற்படுவது, தீவிரவாத ஒழிப்பு, பருவகால மாறுபாடு போன்றவை குறித்து விவாதிக்கப்படவுள்ளது. கடந்த மார்ச் மாதம் ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தையடுத்து அணு சக்தி குறித்து மூன்று சுற்று பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் அடுத்த கட்ட பேச்சுவார்த்தை அடுத்து ஆண்டு நடைபெறும் என இந்தியா நம்பிக்கை தெரிவித்துள்ளது.


மேலும் தற்போது 10.3 பில்லியன் டொலர் அளவில் உள்ள வர்த்தகத்தை 25 பில்லியன் டொலர் அளவிற்கு உயர்த்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும். ஜப்பான் பிரதமரின் வருகையை தொடர்ந்து ஜப்பானிய நிறுவனங்கள் இயந்திரங்கள் உற்பத்தி, எலக்ட்ரோனிக் பொருட்கள் உற்பத்தி, உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவது, அதிவேக



விரைவு ரயிலான புல்லட் ரயில்களை விடுவது போன்றவை அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஜப்பான் பிரதமராக கடந்த செப்டெம்பர் மாதம் பதவியேற்றுள்ள யோஷி ஹிகோ நோடா இந்தியா வருவது இது முதல் முறையாகும். (அ-2)

# பிரதமரின் வருகையை எதிர்த்து கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம்

## விஜயகாந்த் தெரிவிப்பு



பிரதமர் மன்மோகன்சிங் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர் வரும் 26 ஆம் திகதி கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார். இதுகுறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில். முல்லைப்பெரியாறு நீர்த்தேக்கத்தில் அணையின் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடிவரை உயர்த்தலாம் என்று உச்ச நீதிமன்றம் 2006 ஆம் ஆண்டே ஆணையிட்டது. இதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு. ஆனால், இன்று வரை நிறைவேற்றவில்லை.

உச்சநீதிமன்றத்தின் ஆய்வில் இருக்கிறபோதே கேரள அரசு வேண்டுமென்றே முல்லைப்பெரியாறு பிரச்சினையை கிளப்பியது.

பழைய அணைக்கு பதிலாக புதிய அணை கட்டப்போவதாகவும் பழைய அணையின் நீர்மட்டத்தை 120அடியாக குறைக்க வேண்டும் என்றும் கேரள சட்ட மன்றத்திலேயே தீர்மானம் போட்டனர். கேரளாவில் உள்ள தமிழர்கள் தாக்கப்பட்டனர். தமிழ்நாட்டிலிருந்து அங்கு சென்ற ஐயப்ப பக்தர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டனர்.

இவ்வாறு தொடர்ந்து தமிழரின் உயிருக்கும் பாதுகாப்பு இல்லை.

தமிழ்நாட்டிற்கு இந்திய அரசு தொடர்ந்து ஓரவஞ்சனை செய்து வருகிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகள், மீனவர்கள், வியாபாரிகள், தொழிலாளர்கள் என்று அனைத்து தரப்பு மக்களும் தொடர்ந்து போராடி வருகின்றனர். தே.மு.தி.கவைச் சேர்ந்த தலைமை கழகப் பேச்சாளர் இடிமுழக்கம் சேகர் முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தனது இன்னுயிரையே மாய்த்துக் கொண்டார்.

இவ்வாறு தமிழ்நாட்டு மக்களை வாட்டி வதைக்கும் போக்கினை மேற்கொண்டு விட்டு இந்திய அரசின் சின்னமாக இப்பொழுது பிரதமர் தமிழ் நாட்டிற்கு எந்த முகத்தோடு வருகிறார் என்பதே எங்கள் கேள்வி. மக்களின் கோரிக்கைகளையும் உணர்வுகளையும் மதிக்காமல் பிரதமர் தமிழ் நாட்டிற்கு ஏன் வரவேண்டும். தமிழர்கள் என்றாலே இந்திய அரசைப் பொறுத்தவரையில் பிள்ளைப் பூச்சிகளாகவே கருதுகின்றார்கள். ஆகவே, இந்திய பிரதமர் 25 , 26 ஆம் திகதிகளில் சென்னைக்கு வருகிற பொழுது தமிழ் நாட்டு மக்களின் ஒருமித்த உணர்வை காட்டும் வகையில் தே.மு.தி.க. சார்பில் ஜனநாயக ரீதியில் அமைதியான முறையில் சென்னையில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# மக்களால் தேர்வு செய்யப்பட்ட என்னை பதவியிலிருந்து தூக்கியெறியும் நிலை

## பாக்.பிரதமர் கிலானி ஆவேசம்

(இஸ்லாமாபாத்)

ஜனநாயக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட என்னை, பதவியில் இருந்து தூக்கி எறியும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஆட்சியா அல்லது, இராணுவ ஆட்சி தேவையா என்று மக்கள் முடிவு செய்யவேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி ஆவேசப்பட்டார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், கடந்த மே மாதம் அபோதாபாத்தில் ஒசாமா பின் லேடன் அமெரிக்க இராணுவ வீரர்களால் கொல்லப்பட்டதிலிருந்து அரசுக்கு அதிக நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

அரசு அதிகாரத்தையும் தாண்டி மற்றொரு அரசு செயற்படுவது சரியானதல்ல. ஜனநாயக அரசைத் தூக்கி எறியும் சதி முயற்சிகள் நடக்கின்றன. இது எனக்கு தெரியும். ஆட்சியில் இருந்தாலும், இல்லை எதிர்க்கட்சியாக இருந்தாலும், நாங்கள் மக்கள் உரிமைகளைக்காக்க போராடுவோம். இராணுவ அமைச்சகமும், பிரதமரின் கீழ் செயற்படுகிறது என்பதை உணர வேண்டும். எவராவது தாங்கள் சுயேட்சையாக செயற்படுவதாக நினைத்தால் அது தவறு.

ஆகவே மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஆட்சியா அல்லது இராணுவத்தின் தலைமையிலான சர்வாதிகார ஆட்சியா என்பதை மக்கள் முடிவு செய்யவேண்டும் என்றார். இது பாகிஸ்தான் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. (அ-2)

# அல்கொய்தா தீவிரவாதிகளின் தலைக்கு 50 கோடி ரூபா பரிசு -அமெரிக்கா அறிவிப்பு

அல்கொய்தா தீவிரவாதி தலைக்கு ரூ.50 கோடி பரிசு வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. சிரியாவை சேர்ந்தவர் யாசிங் அல்சூரி. இவருக்கு எசடின் அப்துல் அசீஷ் கலில் என்ற பெயரும் உண்டு. அல்கொய்தா தீவிரவாதியான இவர் ஈரான் நாட்டின் உதவியுடன் அமெரிக்காவுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்.

அல்கொய்தா தீவிரவாத இயக்கத்துக்கு நிதி உதவி மற்றும் அதற்கு ஆட்கள் தேர்வு செய்வது போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். அவர்களின் மூலம் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்க இராணுவத்துக்கு எதிரான தாக்குதல்களை நடத்தி வருகிறார். எனவே, இவரை கண்டு பிடிக்க அமெரிக்க உளவுத் துறை தீவிரமாக ஈடுபட்டது. ஆனால், அவர் எங்கு பதுங்கி இருக்கிறார் என்ற தகவல் கிடைக்கவில்லை.

அதையடுத்து இவர் பற்றிய தகவல் கொடுப்பவர்களுக்கு ரூ.50 கோடி பரிசு வழங்குவதாக அறிவித்துள்ளது. இந்தத் தகவலை அமெரிக்க பாதுகாப்புத்துறை அதிகாரி ராபட்ஹார்டஸ் தெரிவித்துள்ளார். இவருடன் மேலும் 5பேரின் தலைக்கு பரிசு தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1984 ஆம் ஆண்டு முதல் தீவிரவாதிகள் குறித்து தகவல் தருபவர்களுக்கு அமெரிக்கா சன்மானம் வழங்கி வருகிறது. அதுவரை 70 பேருக்கு ரூ.500 கோடி பரிசு தொகை வழங்கப்பட்டுள்ளது என்றும் ஹார்டஸ் தெரிவித்துள்ளார். (அ-2)

# சபரிமலை பக்தர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலை தடுத்து நிறுத்தப்பட வேண்டும்

## தி.மு.க .எம்.பிகள் கோரிக்கை

(புதுடில்லி)


சபரிமலைக்குச் செல்லும் தமிழக பக்தர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலை தடுத்து நிறுத்த வேண்டும். அவர்களுக்கு போதுமான பாதுகாப்பு அளிக்க உத்தரவிட வேண்டும் என பிரதமரிடம் தி.மு.க எம்.பிக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரதமரை நேற்று முன்தினம் தி.மு.க. எம்.பிகள் நேரில் சந் தித்தனர். சந்திப்புக்குப் பின் தி.மு.கவின் வடசென்னை தொகுதி எம்.பி. டி.கே:எஸ் இளங்கோவன் நிருபர்களிடம் கூறியதாவது, தமிழகத்தில் இருந்தும் பிற மாநிலங்களில் இருந்தும் லட்சோப இலட்சம் பக்தர்கள் சபரிமலைக்குச் செல்கின்றனர். அவ்வாறு செல்லும் பக்தர்கள் மீது கேரளாவில் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

இதைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு முன்வர வேண்டும். மேலும் பக்தர்களுக்கு முழு பாதுகாப்பு அளிக்கவேண்டும். இதுகுறித்து பிரதமரிடம் தி.மு.க எம்.பிகள் முறையிட்டுள்ளனர். பிரதமரும் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக எங்களிடம் உறுதி அளித்துள்ளார் என்றார்.

சபரிமலை ஐயப்ப பக்தர்களுக்கு கேரளாவில் முழு பாதுகாப்பு அளிக்கப்ப்டும். ஒரு சில இடங்களில் நடந்துள்ள சம்பவங்கள் குறித்தும் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது என கேரள முதல்வர் உம்மன்சாண்டி தெரிவித்துள்ளார்.

முல்லைப்பெரியாறு பிரச்சினையை மதரீதியாக மோதல் சச்சரவுகளை உருவாக்க சில சக்திகள் எடுத்துவரும் முயற்சிகளை தடுத்து நிறுத்த வேண்டும். கேரள-தமிழ் நாடு முதல்வர்கள் உடனடியாக இவ் விடயத்தில் தலையிட வேண்டும். என தெரிவித்துள்ளனர். (அ-2)



டுபாயில் சிகிச்சை முடித்துவிட்டு கடந்த வாரம் நாடு திரும்பிய பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலிசர்தாரியை (இடது) இஸ்லாமாபாத் ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து அந்நாட்டு பிரதமர் யூசுப் ரசாகிலானி கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

# சகலதுறை வீரர்கள் வரிசையில் பங்களாதேஷின் ஹசன் முதலிடம்

## 10 வருடங்களின் பின் கலிஸ் பின்னடைவு

டெஸ்ட் கிரிக்கெட்டின் சகலதுறை வீரர்களுக்கான சர்வதேச கிரிக்கெட் சபையின் தர வரிசையில் பங்களாதேஷ் வீரர் சகிப் அல் ஹசன் முதலிடத்தை பெற்றுள்ளார்.

நீண்டகாலமாக இதில் முதலிடத்தை வகித்த தென்னாபிரிக்க வீரர் ஜக்கலிஸை பின்தள்ளிவிட்டு சகிப் அல் ஹசன் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இப்பட்டியலில் 24 வயதான சகிப் அல் ஹசன் 404 புள்ளிகளையும் ஜக்கலிஸ் 397 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். அண்மையில் முடிபுற்ற பாகிஸ்தானுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் பங்களாதேஷின் முதல் இன்னிங்ஸில் சகிப் அல் ஹசன் 144 ஓட்டங்களைப் பெற்றதுடன் பந்துவீச்சில் ஓர் இன்னிங்ஸில் 82 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப் போட்டியின் சிறப்பாட்டக் காரராகவும் அவரே தெரிவானவை குறிப்பிடத்தக்கது. இதேவேளை சகலதுறை வீரர்களுக்கான தர வரிசைப்பட்டியலில் 3696 நாட்கள் (சுமார் 10 வருடங்கள்) முதலிடத்திலிருந்த ஜக் கலிஸ் அண்மையில் நடைபெற்ற இலங்கையுடனான முதல் போட்டியில் 31 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதுடன் விக்கெட் எதையும் வீழ்த்தவில்லை.

தற்போது சகலதுறை வீரர்களுக்கான தர வரிசையில் இரண்டாமிடத்திலுள்ள ஜக் கலிஸ், டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையிலும் குமார் சங்கக்காரவுக்கு அடுத்ததாக இரண்டாம் இடத்திலுள்ளார்.

இலங்கையுடன் மீதமுள்ள இரு டெஸ்ட் போட்டிகளிலும் அவர் சிறப்பாக செயற்பட்டால் மீண்டும் முதலிடத்தை அடைய வாய்ப்புள்ளது.

2000ஆம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில் ஜக் கலிஸ் முதலிடம் பெற்றபோது, அந்த இலக்கை அடைந்த மிக இளம் வீரராக விளங்கினார். தற்போது 24 வயதான சகிப் அல் ஹசன்அச்சாதனையையும் முறியடித்துள்ளார்.

கலிஸ் இதுவரை 147 டெஸ்ட்போட்டிகளில் 12 ஆயிரத்து 36 ஓட்டங்களையும் 271 விக்கெற்றுக்களையும் பெற்றுள்ளார். சகிப் அல் ஹசன் 26 டெஸ்ட் போட்டிகளில் ஆயிரத்து 630 ஓட்டங்களையும் 96 விக்கெட்டுக்களையும் பெற்றுள்ளார்.

# இந்தியா இளம் வீரர்களுக்கு பயிற்சியாளர் பிளட்சர் அறிவுரை

(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய வீரர்கள் மற்றும் உள்ளூர் ஊடகங்களின் தூண்டுதலுக்கு இந்திய இளம் வீரர்கள் பலியாகி விடக்கூடாது. தொடர் முடியும் வரை பொறுமையாக இருந்து சாதிக்க வேண்டும் என இந்திய அணியின் பயிற்சியாளர் பிளட்சர் அறிவுரை வழங்கியுள்ளார்.

இதுவரை 100க்கும் மேற்பட்ட டெஸ்ட் போட்டிகளில் பயிற்சியாளராக இருந்தவர் பிளட்சர். தற்போது இந்திய அணியின் பயிற்சியாளராக உள்ள இவர் அனுபவம் வாய்ந்தவர். கடந்த முறை இங்கிலாந்து அணியுடன், இவர் சென்ற போது 87 ஆண்டு கால வரலாற்றில் இல்லாத அளவுக்கு மோசமான தோல்வியை சந்தித்தது. இவருக்கும் பொண்டிங்கிற்கும் ஏழாம் பொறுத்தமாக தான் இருக்கும்.

இது குறித்து தி ஹெரால்டு சன் என்ற பத்திரிகையில் வெளியான செய்தியில்

மூத்த வீரர்களுக்கு ஊடகம் மற்றும் களத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது நன்கு தெரியும். இதனால் இளம் வீரர்களுக்கு பிளட்சர் ஏகப்பட்ட அறிவுரைகளை வழங்கி னார்.

களத்தில் யாருடனும் மோதக் கூடாது அமைதியாக இருக்க வேண்டும். ஊடகங்களிடம் பேசும் போது வார்த்தைகளை கவனமாக பயன்படுத்த வேண்டும். உங்களின் கோபத்தை துடுப்பாட்டத்திலும் பந்துவீச்சிலும் வெளிப்படுத்துங்கள். இவ்வாறு பிளட்சர் கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உரிய தீர்வை முன்வைத்...

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, வ ரலாற்றுக் காலம் முதல் விருந்தோம்பல் பண்பில் தலைசிறந்தவர்கள் என பெருமையுடைய இந்த நாட்டில், தற்போது சமூக நீதி உரிய முறையில் நிலைநாட்டப்படாமையினால் சமூகத்தில் ஏற்றத்தாழ்வு நிலவுவதுடன் பல்வேறு முரண்பாடுகளுக்கும் வழி கோலுகிறது.

நீண்ட காலமாக நீடித்துவரும் சமூகப் பிரச்சினையின் ஒரு பகுதியை மட்டுமே உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளது.

எனவே, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் காத்திரமானதாக அமைய வாய்ப்பில்லை.

பிரச்சினைகளுக்கான மூல காரணிகளை இனம் கண்டு அதற்கான தீர்வுகளை வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் சமூகங்களுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்படுவதனை தடுக்க முடியும்.

பிரச்சினைக்கான காரணிகளை அறிந்து கொள்ள அரசியல் தலைமையும், மக்களும் முனைப்புக் காட்டத் தவறியுள்ளனர்.

சமூக முரண்பாடுகளுக்கான ஏதுக்களை கண்டறிவதற்காக பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவை சில சிறந்த பரிந்துரைகளை முன்வைத்தன. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான மெய்யான முனைப்புக்கள் குறித்து சந்தேகம் நிலவி வருகிறது.

அர்த்தமுள்ள வகையில் பிரச்சினைக்குத்தீர்வு காண அரசாங்கம் தவறியுள்ள அதேவேளை, மக்களும் தமக்கு நேர்ந்த பாதிப்புக்களை மறந்து அதே தவறுகளை மறுபடியும் மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-5)

# க.பொ.த...

திட்டங்களுக்கு அமைய மேற்படி இசட் வெட்டுப்புள்ளி முறை தயாரிக்கப்பட்டு வருவதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# போர்க்குற்...

அனைவரும் பாடுபடல் வேண்டு மெனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இவ்வொருங்கிணைந்த பணியில் ஈடுபட்டிருக்கும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனிதவுரிமைகளுக்கான செயற்பாட்டில் தானும் இணைந்திருப்பதையும் குறிப்பிட்டுள்ள ஷிபொன் மக்டோனா அனைத்துப் புலம்பெயர் தமிழ் மக்களும் உண்மையுடன் ஒருங்கிணைந்து அழுத்தத்தினைக் கொடுக்குமாறு வேண்டிக்கொள்வதாகவும் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (எ-5)

# நீர்வேலி...

மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிர்வரும் ஜனவரி 2ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (எ-5)

# முகாம்களை விட்டு...

சென்னை, சிவகங்கை மாவட்டத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தமிழகத்தில் உள்ள 113 இலங்கை அகதிகள் முகாம்கள்தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. முகாம்களில் யாராவது சந்தேக நபர்கள் தங்கி உள்ளார்களா? என்பதை கியூ பிரிவு பொலிஸார் கண்காணித்து வருகின்றனர்.

மேலும் முகாம் தலைவர்களிடம் முகாம்களில் சந்தேக நபர்களின் நடமாட்டம் இருந்தால் தகவல் கொடுக்கும்படி பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையில் இன்று முதல் திங்கட்கிழமை வரை அகதிகள் யாரும் வெளியூர் செல்ல அனுமதி இல்லை. உள்ளூரில் வேலைக்கு செல்பவர்கள் சரியான நேரத்துக்கு முகாமுக்கு வந்து விட வேண்டும். அங்குள்ள தனி பதிவேட்டில் தாங்கள் எங்கு செல்கிறோம், எதற்காக செல்கிறோம் என்பதை எழுதிச்செல்லவேண்டும். தேவைப்பட்டால்முகாம் குடியிருப்பில் சோதனை செய்யப்படும். சந்தேக நபர்களை யாரும் தங்கள் வீடுகளில்தங்கவைக்கக் கூடாது என்று கியூபிரிவு பொலிஸார் கூறியுள்ளார்.

இன்று முதல் 3 நாட்களுக்கு தொடர்ந்து எந்த நேரத்திலும் முகாம்களில் திடீர் சோதனை நடத்தவும் கியூ பிரிவு பொலிஸார் முடிவு செய்துள்ளனர். (எ-5)

# வட மாகாண கல்வி...

மாதம் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையிலும் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் பதில் செயலாளராகவும் இ.இளங்கோவன் கடமையாற்றி வந்தார்.

இந்நிலையில்வடக்குமாகாணபொதுச்சேவை ஆணைக்குழுவால் வடக்கு மாகாண கல்வி அமைச்சு உள்ளூராட்சி அமைச்சு உள்ளிட்ட 4 அமைச்சுகளுக்கான செயலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டது.

இதனடிப்படையில் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக எஸ்.சத்தியசீலன் நியமனம் பெறுகின்றார்.

கரவெட்டி பிரதேச செயலாளராக கடந்த பல வருடங்களாக கடமையாற்றி வரும் எஸ் சத்தியசீலன் எதிர்வரும் 1ஆம் திகதி முதல் வடக்கு மாகாணகல்வி பண்பாட்டலு வல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக நியமனம் பெறுகின்றார்.

இவரது நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கரவெட்டி பிரதேச செயலகம் பிரதேச செயலகங்களுக்கிடையிலான முகாமைத்துவப்போட்டியில் தேசிய ரீதியில் 2ஆம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளராக திருமதி எஸ்.துரைராஜா நியமனம் பெறவுள்ளார் என வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன. (பா)

# மரண அறிவித்தல்

## கணேசலிங்கம் கமலாதேவி

மட்டுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் கமலாதேவி நேற்று 23.12.2011 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா கணேசலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் உதயகுமார் (லண்டன்), உதயசந்தர் (ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், அலிசன்வில்சன், கயல்விழி ( ஆசிரியர், யா/மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும், விமலாதேவி, சண்முகசுந்தரம், ஆலாலசுந்தரம், சந்திராதேவி மற்றும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுந்தரலிங்கம், மனோகராதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், செல்வலக்சுமி, யோகலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சங்கவி, திவ்யன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.12.2011 இன்று சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் பி.ப. 3 மணியளவில் மட்டுவில் வடக்கு ஊரிப்பட்டி மயானத்தில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'உதயகிரி'
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்: க. உதயசந்தர் (மகன்)
(ஆசிரியர், யா/ சாவகச்சேரி
இந்துக் கல்லூரி)

(சி-5301)

# இரணைமடு திருவருள் மிகு கனகாம்பிகை அம்பாள் கோவில்

## குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) சம்பந்தமான கலந்துரையாடல்

எதிர்வரும் 30.01.2012 அன்று காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரையுள்ள சுப வேளையில் அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் குட முழுக்கு நிகழ திருவருள் கூடியுள்ளது.

இது சம்பந்தமான கலந்துரையாடல் 25.12.2011 (நாளை) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு அறங்காவலர் சபைத் தலைவர் தலைமையில் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து அடியார்களையும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

**அன்னையின் அருள் அகிலமெல்லாம் ஆளும்**

அறங்காவலர்
கனகாம்பிகை அம்பாள் கோவில் சபை
இரணைமடு

(சி-5300)

## உயர்பட்டப்படிப்புகள் பீட

# புதிய கற்கைநெறிகளுக்கான விரிவுரைகள் அடுத்த மாதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தினால் நடத்தப்படும் கற்கை நெறிகளின் புதிய பிரிவுகளுக்கான ஆரம்ப நிகழ்வும் விரிவுரைகளும் அடுத்த மாதம் நடைபெறவுள்ளதாக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

முது விஞ்ஞானமாணி சுற்றுச்சூழல் முகாமைத்துவம், நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் ஜனவரி 7ஆம் திகதியிலும்

முதுகலைமாணி தமிழ், முதுகலைமாணி சைவ சித்தாந்தம், முதுகல்விமாணி, முது விஞ்ஞானமாணி சுகாதார முகாமைத்துவம் ஆகிய கற்கைநெறிகளுக்கான விரிவு ரைகள் எதிர்வரும் ஜனவரி 21ஆம் திகதியும் நடைபெறும் என பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்துள்ளார் (ஏ)

## கிளர்ச்சிக் குழு...

போதல் சம்பவம் குறித்து ஜே.வி.பி. கிளர்ச்சிக் குழு உறுப்பினர்கள் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாடு செய்யும் தருணத்தில் குகனின் மனைவி மற்றும் பிள்ளைகளும் இணைந்து கொண்டிருந்ததாக கிளர்ச்சிக் குழு உறுப்பினர் உதுல் பிரேமரட்ண தெரிவித்துள்ளார். (ஏ-5)

## புலமைப்பரிசில் பரீட்சை...

மட்டிக்களப்பு - 153, ஹாட்லி கல்லூரி - பருத்தித்துறை -149, முஸ்லிம் மகளிர் கல்லூரி -கொழும்பு- 171, இராமநாதன் இந்துக் கல்லூரி -கொழும்பு - 164, பதியூதின் முஸ்லிம் மகளிர் கல்லூரி- கண்டி - 164, வின்சன்ட் மகளிர் கல்லூரி மட்டக்களப்பு - 163, மஹ்மூத் மகளிர் கல்லூரி கல்முனை - 161, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை யாழ்ப்பாணம் -156, ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி திருகோணமலை - 151.(ஏ-5)

## மரண அறிவித்தல்

### பொன்னையா சுந்தரலிங்கம் (சீனன்)

புங்குடுதீவு 07, ஊரதீவைப் பிறப்பிடமாகவும், 99 பிறவுண் வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுந்தரலிங்கம் 23.12.2011 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா, அன்னபூரணம் அவர்களின் மூத்த மகனும் நடனேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலாம்பிகை, கமலாம்பிகை, சுந்தராம்பாள், புதுமைவேலன், சுபத்திரா (இந்தியா), சுமேந்திராதேவி, காலஞ்சென்ற சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தருமலிங்கம், தங்கராசா, ஆலாலசுந்தரம், ஸ்ரீதர்(இந்தியா), சிவலோகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24.12.2011 இன்று பிற்பகல் 3 மணியளவில் 185, கில்லர் லேன், கஸ்தூரியார் வீதியில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்ளதிற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

185, கில்லர் லேன், கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(சி-5299)

தகவல்:
குடும்பத்தினர்

### நீங்காத நினைவுடன்...

### கண்ணீர் அஞ்சலி



யா.மா.சபை சுகாதாரப் பகுதி நலன்புரிச் சங்கத் தலைவர், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் மரிசலீம்பிள்ளை மரியதாசன் அவர்களின் பிரிவால் ஆறாத்துயர் அடைந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாநகரசபை சுகாதாரப் பகுதி, நலன்புரிச் சங்கம்.

(7020)


ஹரணி மோட்டோர்ஸ் & ஹாட்வெயார்

இல. 164, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு விசேட விலைத்தள்ளுபடிகளுடன் சமையலுக்கான அடுப்பு வகைகள், சிலின்டர்கள், விதம் விதமான பாத்திர வகைகள், கவர்ச்சிகரமான வர்ணப் பூச்சுக்கள் மற்றும் பலவிதமான பட்டாசுப் பொருட்கள், சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர்ப் போத்தல்கள் இன்னும் பல வகையான பொருட்களை பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.



HARANI MOTORS & HARDWARES

No.164, Stanley Road, Jaffna, T.P.: 021 222 2850



6 இலவச புத்தகம்

ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற விரும்பும் அனைவருக்கும் MyWay இன் 6 ஆங்கில புத்தகங்கள் மற்றும் பயிற்சி வகுப்பு இலவசம்.
24.12.2011 இன்று அருகிலுள்ள MyWay கிளையினை அணுகவும்

MyWay English
182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம்
NSB அருகில் நெல்லியடி
இலங்கை வங்கி மேல்மாடி. சங்கானை
ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி
077 33 63 456



SPOKEN ENGLISH
புதிய பிரிவுகள் ஆரம்பம்
MyWay English

182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம்
சனி (இன்று) : காலை 8-9, 9-10, 10-11, 11-12

இலங்கை வங்கி மேல்மாடி. சங்கானை
சனி (இன்று) : மாலை 2-3, 3-4, 4-5, 5-6

NSB அருகில் நெல்லியடி
ஞாயிறு(நாளை) : காலை 8-9,9-10,10-11,11-12

ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி
ஞாயிறு(நாளை) : மாலை 2-3,3-4,4-5,5-6

077 33 63 456



சட்டக் கல்லூரி, அரசாங்க போட்டிப் பரீட்சை வகுப்புகள்

பொது உளச்சார்பு மொழியறிவு என்பன கற்பிக்கப்படுகின்றன.

20 மணித்தியாலங்கள் தனிப்பட்ட கவனிப்பு
எமது நிறுவனத்தில் மாத்திரம் நீங்கள் கொண்டுவரும் பொதுஉளச்சார்பு வினாக்கள் கற்பிக்கப்படுகிறது. சனி, ஞாயிறு காலை 10 - 12 மணிவரை

திசை காட்டி (பிறைவேற்) லிமிட்டட்



முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

021 221 9016,
021 491 4527

thisaikaddi@sltnet.lk
www.thisaikaddi.lk

(யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில்
யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)

(சி-5300)



- கனடா செல்ல வேண்டுமா?
- பிரான்ஸ், சுவிஸ், நோர்வே செல்ல விருப்பமா?
- IELTS இல்லாமல் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி பயில வேண்டுமா?
- அவுஸ்திரேலியா குடும்பத்துடன் செல்ல விளைகின்றீர்களா?

வாருங்கள் சனி அல்லது ஞாயிறு
உங்கள் முன்மாதிரியான ஆலோசனை நிறுவனத்திற்கு

திசை காட்டி (பிறைவேற்) லிமிட்டட்



முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

021 221 9016,
021 491 4527

thisaikaddi@sltnet.lk
www.thisaikaddi.lk

(யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில்
யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)

(சி-5300)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.